ISSN 2424-6654



தமிழ்த் தூது

# தாயக ஒலி


THAYAKA OLI

இரு திங்கள் ஏடு 29

ஒலிபரப்பின் ஆளுமை



செல்வி சற்சொரூபவதி நாதன்





# தொழிலாளர் தினம்

‘உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்!’

வைகாசி - ஆனி 2017

விலை ரூபா 100/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க. பரணீதரன்




73, Main Street, Colombo 11. | T: +94 11 2391592, 2391593 | F: +94 11 2391745 | E: info@littleasia.lk
www.littleasia.lk | Skype: little.asia.silk
317, 317A, Galle Road, Wellawatte, Colombo 06. | T: +94 11 250 4470, 250 0098 | F: +94 11 2508934
E: info@littleasia.lk | www.littleasia.lk | skype: little.asia.emporium
Follow us on

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISSN 2424-6654

"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானிலும் நனி சிறந்தனவே"

# தாயக ஒலி

**(தாயக மண்ணின் தனித்துவம் காக்கும் இருதிங்கள் ஏடு)**

வள்ளுவர் ஆண்டு 2047 வைகாசி - ஆனி 2017 வில்-05 ஒலி-29

**இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகமும், இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகமும் இணைந்து வெளியிடும்**

**தாயக ஒலி**

**பிரதம ஆசிரியர்**

த.சிவசுப்பிரமணியம் (தம்பு சிவா)
தொலைபேசி : 0094(0)718676482

**துணை ஆசிரியர்கள்**

தாயகன் (இலண்டன்), சி.பவன் ( இலங்கை)

**மதியுரைக் குழு**

பேராசிரியர் சபா ஜெயராசா
வவுனியூர் இரா உதயணன்
சைவப்புலவர் சு.செல்லத்துரை
ந.கருணை ஆனந்தன்
எஸ்.ஈஸ்வரநாதன் (இலண்டன்)
வைத்திய கலாநிதி தாஸிம் அகமது

**சஞ்சிகைக் குழு**

மூ.சிவலிங்கம்
கா.வைத்தீஸ்வரன்
கதிரவேலு மகாதேவா
செ.ராஜேந்திரா
இ.ஜீவகாந்தன்

**வெளிநாட்டுப் பிரதிநிதிகள் :**

| | | |
|---|---|---|
| கனடா | : | முருகேசு கிருபாகரன் |
| | | து.நடராஜா, அ.பற்குணன் |
| இலண்டன் | : | இ.பார்லேந்திரநாதன் |
| அமெரிக்கா | : | வே.பிரேமதயாளன் |
| அவுஸ்திரேலியா | : | தி.திருநந்தகுமார் |
| பிரான்ஸ் | : | ச.சச்சிதானந்தம் |

**ஐரோப்பிய நாடுகளுக்கான விசேட ஒருங்கிணைப்பாளர்**

திருமலை பாலா
தொ.பேசி : 0044(0) 7956486014

தொடர்பு : 9-2/1, நெல்சன் இடம்,
கொழும்பு - 06, இலங்கை
தொ.பேசி. : 0094(0)112364124
Email : editorthayakaoli@gmail.com

தாயக ஒலியில் இடம்பெறும் படைப்புக்களுக்குப் படைப்பாளிகளே பொறுப்புடையவர்கள். ஆக்கங்கள் ஆசிரியரின் அவதானிப்புடன் பிரசுரமாகும்

– ஆசிரியர்

## உள்ளே ஒலிப்பவை

பேனா முனையிலிருந்து... 02

**கட்டுரை :**
- பெண்களின் எழுச்சிக்கு.... 03
- செவ்வியல் ஆடல் 34
- சித்தர் பாடல்கள் 36
- தமிழவேள் க.இ.க.கந்தசாமி 44

**சிறுகதை :**
- உயிர்விட்ட தமிழும் உறங்கும்.. 08
- டொனேஷன் 15

**கவிதை :**
- பொழுது விடியும் 20
- மலைகளை நகர்த்தும் பேரன்பு 26
- பிறந்த நிலமே மறந்துவிடுமா! 26
- சிறுவர் துஸ்பிரயோகம் 32

**நூல் அறிமுகம் :**
- நான்மணிமாலை 39
- சிறகடிக்கும் சிட்டுக்கள் 40

**இலக்கியச் செம்மல்கள் :**
- ஜெயகாந்தன் 27
- இலங்கையர்கோன் 42

**சிறுவர்கதை :**
- ஆமையம் முயலும் - புதிய கூற்று 13
- தீர்ப்பு என்ன? 19
- ஆகா என்ன சுவை 28

**நாடகம் :**
- மக்கள் களரி - மக்களுக்கான அரங்கம் 29

**கேட்டதைச் சொல்ல வந்தோம் :**
- 15 ஆயிரம் விசேட வைத்தியர்கள் 18

**மதிப்பிற்குரியவர்கள் :**
- பேராசிரியர் வ.மகேஸ்வரன் 22
- தோழர் ப.ஜீவானந்தம் 23
- இளம் தாரகை மலாலா 25

**கௌரவம் பெற்றவர்கள் :**
- ஓ.கே.குணநாதன் 24
- ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி 31

**நகைச்சுவைக் கதைகள் :**
- அசத்தலான மனைவி 14

**உங்கள் விருந்து:** 46-48

**ஏனையவை :**
- மொழியின் பயன்பாடு 17
- நாட்டோடிக் கதைகள் 21

**அட்டையில்....**

உலகத் தொழிலாளர் தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேனா முனையிலிருந்து....



# நோய்களும் மனித அவலங்களும்

இன்றைய காலகட்டத்திலே, இலங்கையில் பரவலாக டெங்கு, வைரஸ் காய்ச்சல் போன்ற நோய்கள் மக்களைப் பெரிதும் வாட்டி வதைப்பதை வைத்திய சாலைகளின் புள்ளிவிபரங்கள் சுட்டிக்காட்டுகின்றன. இத்தகைய நோய்களினால் பல உயிர்கள் காவுகொள்ளப்பட்டுள்ளன. பலர் ஆபத்தான நிலையில் இருப்பதாகவும், நோயாளர்களின் பெருக்கத்தினால் வைத்தியசாலைகளில் இடவசதியின்மையால் அருகிலுள்ள பெரிய வைத்திய சாலைகளுக்கு நோயாளர்கள் மாற்றப்படுவதாகவும், இத்தகைய நோய்களினால் கர்ப்பிணித் தாய்மார்களும், குழந்தைகளுமே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அறியமுடிகிறது.

நீர் தேங்கி நிற்பதும், குப்பை கழிவுப்பொருட்கள் குவிந்து கிடப்பதும் நுளம்புப் பெருக்கத்திற்குக் காரணம் என்பதை மக்கள் புரிந்துகொண்டு வீட்டையும் சுற்றாடலையும் சுத்தமாக வைத்திருப்பதன் மூலம் நுளம்பு பெருகுவதை முற்றாகத் தடுக்கமுடியும். பாடசாலைகள், அரச அலுவலகங்கள், தனியார் காணிகள் என்பவற்றை உரியவர்கள் சுத்தமாக வைத்திருப்பதை உறுதிப்படுத்த வேண்டும். மக்கள் கூடும் பொது இடங்களான சந்தை, பேருந்து நிலையம், பொது கழிப்பிடங்கள் போன்றவற்றைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். இந்த விடயத்தில் உள்ளூராட்சிச் சபைகளின் பணிகள் முக்கியத்துவம் பெறுகின்றன. உள்ளூராட்சிச் சபைகளின் பரிபாலனத்திற்குட்பட்ட பகுதிகளிலுள்ள பொது இடங்கள், கழிவுநீர் ஓடும் கான்கள் என்பவற்றைத் தினமும் உரியமுறையில் சுத்தம் செய்ய வேண்டும். தொழிலாளர்கள் உரிய முறையில் தமது கடமையைச் செய்கின்றார்களா? என்பதைப் பொறுப்பானவர்கள் கண்காணிக்க வேண்டும். சுகாதாரப் பரிசோதகர்களின் கண்காணிப்பு மிகவும் அவசியம். உள்ளூராட்சிச் சபைகளின் அதிகாரிகள் பாராமுகமாக இருப்பதனால்தான் சுகாதாரச் சீர்கேடுகள் நடந்து வருகின்றன என்று ஊடகங்கள் பலமுறை குற்றம் சுமத்தியுள்ளமையை இந்த இடத்தில் சுட்டிக் காட்ட வேண்டும்.

“வருமுன் காப்போம்” என்பதைப் பொதுமக்களாகிய எல்லோரும் மனத்தில் நிறுத்தி விழிப்புணர்ச்சியுடன் செயற்படவேண்டும். சுகாதாரத்துறையினரும் மக்கள் நலம்கருதி இடைவிடாது தமது பணியை முன்னெடுக்க வேண்டும். நோய்கள் வந்தபின் பதட்டப்பட்டு விரைந்து நடவடிக்கை எடுக்க முனைப்புக் காட்டுவதைப் போல் நோய்கள் வராமல் தடுக்கும் வழிகளை முன்கூட்டியே எடுத்திருந்தால் மரணங்களைத் தடுத்திருக்கலாமல்லவா? பொதுவாக எல்லோருடைய அக்கறையீனமே அடிப்படைக்காரணம் என்பது மறுப்பதற்கில்லை.

சுகாதார சேவை உண்மையிலேயே மக்களுக்கான அத்தியாவசிய சேவையாகும். மருத்துவர்கள், தாதிமார்கள் தமது கடமையை அர்ப்பணிப்புடன், சேவை மனப்பான்மையுடன் செயலாற்ற வேண்டியவர்களாக உள்ளனர். அரசாங்கப் பணத்தில் (மக்களின் வரிப்பணத்தில்) இலவசமாகக் கல்வி கற்று, மருத்துவர்களாக வெளிவந்து, மக்களுக்குச் சேவையாற்ற வேண்டியவர்கள் அதை மறந்து, பலர் வெளிநாடுகளுக்குச் சென்று விட்டார்கள். தற்பொழுது அரச வைத்தியசாலைகளில் பணியாற்றுபவர்கள் தொழிற்சங்க ரீதியான நடவடிக்கைகளை முன்னெடுப்பதும், வேலை நிறுத்தங்களை மேற்கொள்வதுமாக இருப்பது வேதனைதரும் விடயமாகும். மருத்துவ தேவைகளுக்காக வைத்தியசாலையை நாடிவரும் அப்பாவி நோயாளர்கள், மருத்துவர்கள் தாதிமார்களின் பணிப்பகிஷ்கரிப்பால் சொல்லணாத் துன்பங்களை எதிர்கொள்கின்றார்கள். மருத்துவர்களே, தாதிமார்களே உங்களுக்குள்ள பிரச்சினைகளைப் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்த்துக்கொள்ளுங்கள். அப்பாவி உயிர்களுடன் விளையாடாதீர்கள். ‘நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்’ என்பதை நினைவில் கொண்டு மக்கள் பணியை இதயசுத்தியுடன் நிறைவேற்றி பிறந்த நாட்டுக்குப் பெருமையைத் தேடிக் கொடுங்கள்.


மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.....

**- ஆசிரியர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களின் எழுச்சிக்குக் குரல்கொடுத்த பாரதியும் பாரதிதாசனும் : ஒரு நோக்கு

தம்பு சிவசுப்பிரமணியம்





அன்றைய மக்கள் குடும்பமாக, சமுதாயமாக வாழத் தொடங்கிய காலகட்டத்தில் ஆண்களும், பெண்களும் சமமாகவே வாழ்ந்து வந்துள்ளனர். காலப்போக்கில் அதிகாரமமதை கொண்ட மனப்பான்மை காரணமாக ஆண்கள், பெண்களைப் போதைப் பொருட்களாகக் கருதி அவர்களைத் தொடர்ந்தும் தங்களது ஆதிக்கத்தின் கீழ் கட்டுப்படுத்தி வைத்துக்கொள்ள முயன்று அவ்வாறே செயற்பட்டனர். இதனால் நமது சமுதாயத்தில் ஒரு முரண்பாடு தோன்றலாயிற்று.

தமிழ் இலக்கிய வரலாற்றில் சங்ககாலம் காதலையும் வீரத்தையும் முன்னிலைப்படுத்திய போது அக்காலத்தில் வாழ்ந்த பெண்கள் மதிப்புக்குரியவர்களாகவே வாழ்ந்துள்ளார்கள். மன்னர் உலாவரும் காட்சியைச் சென்று பார்ப்பது, குதிரையேற்றம் போன்ற விளையாட்டுக்களைக் கண்டுகளிப்பது போன்றவற்றிலும் பெண்கள் சுதந்திரமாகப் பங்குகொண்டார்கள். தான் விரும்பியவனைக் காதலிப்பது, அவனைக் களவாகச் சந்தித்து உரையாடுவது என்பன எல்லாம் அக்கால இலக்கியங்கள் வாயிலாகப் பெண்களைப் பற்றி நாம் அறிந்த உண்மைகள். இலக்கியங்கள் சமுதாயத்தைப் பிரதிபலிப்பதாகவே அமைவதால் அன்றைய இலக்கியங்களை நோக்குமிடத்து பெண்கள் எவ்வித சிறப்புடன் வாழ்ந்திருப்பார்கள் என்பதை உணர்ந்து கொள்ள முடியும்.

"தமிழக வரலாற்றின் இடைக்காலத்தை இருண்ட காலம் என்று கூறலாம். வாழ்க்கையில் வழுக்கி விழுந்த சமயவாதிகள், "சேலை கட்டிய மாதரை நம்பாதே" "பெண் மாயை" "பெண்புத்தி பின்புத்தி" என்று போதித்தனர். அவர்கள் கட்டியளந்த கதைகளால் சமய உலகில் பெண்களின் நிலை தாழ்ந்தது. மற்றைய துறைகளில் அவர்கள் பின்னுக்குத் தள்ளப்பட இந்தக் கருத்துக்கள் துணைபோயின" என்று தமிழக ஆய்வாளர் முனைவர் மா.பா.குருசாமி ஒரு கட்டுரையில் தெரிவித்திருந்தார்.

சமுதாய வாழ்க்கையில், ஒரு மனிதனின் போக வாழ்க்கைக்கு வேண்டிய செல்வங்களுள் ஒன்றாகப் பெண்ணும் சேர்க்கப்பட்டாள். மற்றைய பொருட்களோடு பெண்களையும் சேர்த்துத் தானம் கொடுக்கும் வழக்கம் இருந்தது. "வாழ்க்கைத்துணை நலமாக" என்று வள்ளுவர் காலத்தில் மதிக்கப்பெற்ற பெண் "கன்னிகாதானமாக" மாற்றப்பட்ட அவநிலை நடைமுறையாயிற்று. சீதனமாகக் கொண்டுவரும் பொருள் அவளோடு சேர்ந்து கணவனின் உடைமையாயிற்று. "ஈன்று புறந்தருதல் எந்தலைக்கடன்" என்று ஏற்றுக்கொண்ட பெண்கள் பிள்ளைகளைப் பெற்றுத்தரும் இயந்திரங்களாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறிப்போனது காலத்தின் கொடுமையாயிற்று. மேலும் வீட்டு வேலைகள் யாவற்றையும் அவளே செய்ய வேண்டிய பரிதாபநிலைக்கும் தள்ளப்பட்டாள்.

பெண்களுக்கு ஏற்பட்டுள்ள அவலநிலையைக் கண்டு பொங்கி எழுந்த பாட்டுக்கு ஒரு புலவன் பாரதியும், பாவேந்தர் பாரதிதாசனும் தத்தமது முற்போக்கான கொள்கைகளை முன்னிலைப்படுத்தி கவிதைகளைத் தந்துள்ளனர். தாழ்வுற்று, விடுதலை தவறிக்கெட்டு விலங்குகளாய் வாழ்ந்த பெண்களின் எழுச்சிக்காக தமது நாட்டுத் தலைவர்கள் விடுதலை இயக்கத்தைத் தொடங்கிய காலத்தில் பாரதியாரின் குரல் ஓங்கி ஒலித்தது.

"மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்" என்றுரைத்த பாரதியைத் தொடர்ந்து வந்த பாவேந்தர் பாரதிதாசன் பெண்களின் விடுதலைக்கு முரசு கொட்டினார். தமிழ்க் கவிஞர்களில் முதன்மைப்படுத்தப்பட்டு நிற்கின்ற, புரட்சிக்கு வித்திட்ட மகாகவி பாரதியும், பாவேந்தர் பாரதிதாசனும் வெறும் உணர்ச்சிகளின் அடிப்படையில் மட்டும் பெண்கள் முன்னேற்றம் பற்றிக் கவிதைகள் எழுதவில்லை. பெண்கள் அடிமைகளாக புலன்களற்ற பேதைகளாக வைத்திருக்கும் சமுதாயத்தை எண்ணிப் பார்த்து பெண்களின் விடுதலைக்காவும் மேம்பாட்டிற்காகவும் பாடுபட்டனர். "ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக" இந்திய நாட்டிலும் உலகிலும் வாழுகின்ற வரை, இந்த இலட்சியத்துக்காகப் போராடுகின்றவர்களுக்கு கவிஞர்கள் இருவரினதும் கருத்துக்கள் உற்சாக மளித்து, உயிரூட்டி வழிகாட்டுவனவாக அமைந்துள்ளன. இவர்கள் வாழ்ந்த காலத்தில் பெண்களின் வாழ்க்கை நிலை இன்றிருப்பதைவிட மிகவும் தாழ்வானதாகவும், கேவலமானதாகவும் இருந்தது. அதனால்த் தான் இவர்கள் நெஞ்சுபொறுக்காமல் பெண்ணினத்தின் எழுச்சியைக் காணப் பொங்கி எழுந்தனர். பாரதி தனது 'முரசு' என்ற கவிதையிலே பெண்களைப் பற்றிக் கூறியதை இப்படியாகக் காணவைக்கிறது.

*"பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் - புவி*
*பேணி வளர்த்திடும் ஈசன்*
*மண்ணுக் குள்ளேசில மூடர் - நல்ல*
*மாத ரறிவைக் கெடுத்தார்."*

பெண்கள் விடுதலைக்கும்மியில்...

*"ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்*
*றெண்ணி யிருந்தவர் மாய்ந்து விட்டார்*
*வீட்டுக் குள்ளே பெண்ணை பூட்டிவைப் போமென்ற*
*விந்தை மனிதர் தலைகவிழ்ந்தார்."*

என்று எடுத்தியம்பியுள்ளார்.

மனித வாழ்க்கையில் சரிபாதியாக, வாழ்க்கையின் பங்காளியாக இணை நலன்களாக இருக்க வேண்டிய பெண்களைச் சமுதாயக் கொடுமைகளுக்கு ஆளாக்கி, அடிமைகளாக, ஏவலர்களாக, சுயசிந்தனையற்றவர்களாக வைத்திருப்பதனால் ஏற்பட்டுவிட்ட இழப்புக்களை இரு பெருங்கவிஞர்களும் அருமையாகச் சுட்டிக் காட்டுகின்றனர். பெண்களைத் தாழ்நிலையில் வைத்திருந்தால் அவர்களிடமிருந்து உயரிய மனித குலம் தோன்றுவதற்கு இடமில்லை என்பதை பாரதியார்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நிலத்தின் தன்மை பயிர்க்குளதாகுமாம்
நீசத் தொண்டும் மடமையும் கொண்டதாய்
தலத்தில் மாண்புயர் மக்களைப் பெற்றிடல்
சாலவே யரிதாவதோர் செய்தியாம்"

என்று கருத்துடனான செய்தியை முன்வைக்கின்றார்.

பெண் விடுதலையைக் கூறவந்த பாரதியார் பின்வருமாறு செப்புகிறார்-

"விடுத லைக்கு மகளிரெல் லோரும்
வேட்கை கொண்டனம், வெல்லுவம் என்றே
திடம னத்தின் மதுக்கிண்ண மீது
சேர்ந்து நாம்பிர திக்கினை செய்வோம்
உடைய வளசக்தி ஆண்பெண் ணிரண்டும்
ஒருநி கர்செய் துரிமை சமைத்தாள்
இடையிலேபட்ட கீழ்நிலை கண்டீர்
இதற்கு நாமொருப் பட்டிருப் போமோ?" என்கிறார்.

பெண் அடிமை நீங்கவேண்டும் என்பதற்காகப் பல ஆவேசமான கவிதைகளைப் படைத்த மகாகவி பாரதியார் பெண்விடுதலையை நோக்கி 'பாஞ்சாலி சபதம்' என்னும் காவியத்தையும் படைத்துள்ளார். சூதாட்டத்தில் தருமன் திரௌபதியை வைத்துத் தோற்றுவிட்டான். திரௌபதி தன் உரிமையை நிலைநிறுத்த பின்வருமாறு கேட்கிறாள்.

"நாயகர் தாந்தம்மைத் தோற்றபின் - என்னை
நல்கும் உரிமை அவர்க்கில்லை"

என்ற வரிகளின் ஊடாகப் பெண் தனது உரிமையைத் துணிந்து சொல்கிறாள்.

புரட்சிக்கவி, பாவேந்தர் பாரதிதாசன் தனக்கேயுரிய பாணியில் பெண்ணடிமைத் தனத்தின் விளைவுகளை பின்வருமாறு எடுத்துக் கூறுகின்றார்.

"பெண்ணுக்குப் பேச்சுரிமை வேண்டாம் என் கின்றீரோ?
மண்ணுக்கும் கேடாய் மதித்தீரோ, பெண்ணினத்தை
பெண்ணடிமை தீருமட்டும் பேசுந் திருநாட்டு
மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற்கொம்பே.
ஊமை என்று பெண்ணை உரைக்குமட்டும் உள்ளடங்கும்
ஆமை நிலைமைதான் ஆடவர்க்கும் உண்டு
புலனற்ற பேதையாய்ப் பெண்ணைச் செய்தால் அந்
நிலம் விளைந்த பைங்கூழ் நிலைமையும் அம்மட்டே"

மனித இனம் உணர்ந்து செயற்பட வேண்டிய கருத்துக்களை முன் வைத்துள்ளார்.

எமது சமுதாயம் பெண்களுக்கு 'கற்பு' என்னும் பூட்டை பூட்டி அவர்களை அடக்கிவைக்க முயல்வதனை பாரதியார் ஏற்கவில்லை. கற்பின் பெயரால் வீட்டுக்குள் பெண்ணைச் சிறைவைக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மடைமையினை அவர் எதிர்த்து 'புதுமைப் பெண்ணின்' மூலம் தமது கருத்துக்களை வெளிப்படுத்து கின்றார்.

*"குலத்து மாதர்க்கும் கற்பியல் பாகுமாம்*
*கொடுமை செய்தும் அறிவை யழித்துமந்*
*நலத்தைக் காக்க விரும்புதல் தீமையாம்"*

கற்போடு இணைத்து அவர்காலத்தில் நிலவிய 'கட்டாயத் திருமணம்' பற்றியும் எடுத்துக்கூறத் தவறவில்லை. தாம் வாழ்ந்த சமுதாயத்தின் கண் பெண்களுக்கிழைக்கின்ற மடமைகளையும் கொடுமைகளையும் சுட்டிக்காட்டுகின்றார் பாரதியார்.

*"கற்பு நிலையென்றுசொல்ல வந்தார் - இரு*
*கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்*
*வற்புறுத் திப்பெண்ணைக் கட்டிக் கொடுக்கும்*
*வழக்கத்தைத் தள்ளி மிதித்திடுவோம்"*

இக் கவிதையின் மூலம் பாரதியாரின் கருத்துநிலை எவ்வாறிருந்துள்ளது என்பதை நாம் அறிந்துகொள்ள முடியும்.

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் வாழ்ந்த காலத்தில் குழந்தைத் திருமணத்தின் கொடுமை மிகுந்திருந்தது. தம் மனக் கொதிப்பினை.. வயதான ஆணுக்கு இளம் வயதுப் பெண்ணைக் கட்டிவைப்பதை "முடத் திருமணம்" என்று இடித்துரைக்கின்றார்.

*"மண்ணாய்ப் போக மண்ணாய்ப் போக*
*மனம்பொருந் தாமணம் மண்ணாய்ப் போக!*
*சமூகச் சட்டமே! சமூக வழக்கமே!*
*நீங்கள், மக்கள் அனைவரும் ஏங்கா திருக்க*
*மண்ணாய்ப் போகவே!"*

எவ்வளவு தூரத்திற்கு மனம் பொருந்தா மணத்தை வெறுக்கின்றார் என்பதை எம்மால் உணர்ந்துகொள்ள முடிகின்றது.

கணவனை இழந்த பெண்ணை சமுதாயம் கைம்பெண். விதவை என்று ஒதுக்கி வாழாவெட்டியாக்கிவிட்ட சமூக அமைப்பைச் சாடுகின்றார். மனைவி இறந்தபின் கணவன் மறுமணம் செய்து கொள்வது இயல்பாக இருப்பதைப் போன்று, கணவனை இழந்த பெண்ணும் திருமணம் செய்து வாழ்தல் இயல்பாகவே இருக்க வேண்டும் என்று பாவேந்தர் எண்ணுகிறார்.

*"கைம்மை எனக்கூறி - அப்பெரும்*
*கையினிற் கூர்வேலால்*
*நம்மினப் பெண்ணினத்தின் - இதய*
*நடுவிற் பாய்சுகின்றோம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று தனது உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்தியுள்ளார்.

'பெண்ணுக்கு நீதி' என்ற பாரதிதாசனின் கவிதை கல்யாணமாகாத பெண்ணுக்குக் கூறும் அறிவுரையாக அமைந்துள்ளது.

*"வல்லமை பேசியுன் வீட்டில் - பெண்*
*வாங்கவே வந்திடு வார்கள்சில பேர்கள்...*
*சுற்றத்திலே முதியோர்கள் - இவர்*
*சொற்படி உன்னைத் தொலைத்திடப் பார்ப்பார்.*
*கற்றவளே ஒன்று சொல்வேன் - உன்*
*கண்ணைக் கருத்தைக் கவர்ந்தவன் நாதன்"*

என்று கூறுவது சிந்தனைக்குரிய செயற்பாடு.

புரட்சிக்கு வித்திட்ட மகாகவி பாரதியாரும், பாவேந்தர் பாரதிதாசனும் எல்லோரும் இன்புற்று வாழ்கின்ற, சமுதாய நீதி நிலவுகின்ற புதியதொரு சமத்துவ சமுதாயத்தைக் காண விரும்பினர். அப்படியான சமுதாயத்தில் பெண்கள் ஆண்களுக்கு ஈடாகவும், இணையாகவும் வாழவேண்டுமென்பதைத் தெள்ளத் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளனர்.

*"வண்மை உயர்வு மனிதர் நலமெல்லாம்*
*பெண்மையினால் உண்டென்று பேசவந்த பெண்ணழகே"*

என்கிறார் பாரதிதாசன்

பாவேந்தர் பாரதிதாசன் இன்னுமொரு கவிதையில் இப்படியாகப் பெண்ணின் பெருமையைக் கூறுகின்றார்.

*"மூடத் தனத்தின் முடைநாற்றம் வீசுகின்ற*
*காடு மணக்கவரும் கற்பூரப் பெட்டகமே*
*வேண்டாத சாதிஇருட்டு வெளுப்பதற்குத்*
*தூண்டா விளக்காய்த் துலங்கும் பெருமாட்டி*
*புண்ணிற் சரம் விடுக்கும் பொய்ம் மதத்தின் கூட்டத்தைக்*
*கண்ணிற் கனல்சிந்திக் கட்டழிக்க வந்தவளே*
*எல்லாம் கடவுள் செயல் என்று துடை நடுங்கும்*
*பொல்லாங்கு தீர்த்துப் புதுமைசெய வந்தவளே"*

ஒடுக்கி அடக்கப்பட்ட பெண்களின் எழுச்சிக்காகக் குரல் கொடுத்த இரு மகாகவிகளும் வரலாற்றில் முகிழ்ந்து நிற்கின்றார்கள்.

***"என்று தணியும் இந்தச் சுதந்திர தாகம்?***
***என்று மடியும் எங்கள் அடிமையின் மோகம்"***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனந்தி

இக் கதைக்கு ஒரு சிறு முன் குறிப்பு : ஆன்மீக ஞானமென்ற ஒளி மயமான இருப்புலகம் ஒன்றே என்னுடையது இந்த மாய உலகின் விருப்பு வெறுப்பு என்ற கறைகளுக்குள் சிக்கி எழுதும் தேவை என்றைக்குமே எனக்கு வந்ததில்லை பெருமைக்குரிய இலக்கிய உலகம் தூக்கிப் பிடிக்கும் விமர்சன தராசில் விழுந்து விருதுகள் பெறும் நோக்கம் ஒன்றையே மனம் கொண்டு எழுதுகின்ற வாழ்வு மயக்கம் இல்லாதொழிந்த நிலையிலேயே நான் எழுதும் கதைகள். அந்நிலையிலேயே நான் எழுதும் மற்றுமொரு விழிப்பு நிலை கதை இது.

# உயிர் விட்ட தமிழும் உறங்கும் உண்மைகளும்



துக்க சஞ்சாரமான கருந்தீட்டு வாழ்க்கையின் சுவடுகளையே புறம் தள்ளி மறந்து விட்டு ஆன்மீக விழிப்பு நிலை கைகூடிய உயிர் வியாபகமாய் நிலை வாசல் கதவருகே விசுவரூபமெடுத்து வந்து நிற்கும் சுந்தரியையே வெறித்துப் பார்த்த வண்ணம் சுந்தரம் ஆச்சி , திண்ணையின் மறு கோடியில் ஒன்றும் பேசத் தோன்றாது வாயடைத்துப் போய் மௌனமாக அமர்ந்திருந்தாள் வயது அதிகமாகாவிட்டாலும் ஊரிலே அவளை எல்லோரும் அப்படித்தான் ஆச்சி என்று உரிமையோடு அழைக்கிறார்கள். மடத்தடிக்குப் போய் காய் கறி வியாபாரம் செய்து வந்த களைப்பு அவளுக்கு மடத்தடியென்பது மல்லாகம் ஸ்டேஷனுக்குப் பக்கத்தில் இருக்கிற ஓர் சிறிய கொட்டகை. அங்கு பெரிய அளவில் மீன் வியாபாரமும் களை கட்டி அமோகமாய் நடக்கும் அவள் கணவன் ராசு சுருட்டுத் தொழில் செய்து கொண்டு வரும் காசு அவன் குடிக்கே செலவாகி விடுவதால் தான் அவளுக்கு இந்த நிலைமை அதிலும் ஆறும் அவளுக்குப் பெண் பிள்ளைகள்

முதல் மூன்று பெண்களும் அடுக்கடுக்காய் வயதுக்கு வந்து கன்னி கழியக் காத்திருக்கிற நிலைமை. மூத்தவள் சுந்தரிக்கு வயது இருபத்தொன்பதாகிறது. இந்த வருடம் கழிந்தால் முப்பது வயது அரைக் கிழவியாகிவிடுவாள். அதற்குள் அவள் கல்யாணத்தை முடிக்கலாமென்றால் அதிலும் பெரும் சிக்கல். அவளுக்கு வீடு தேடி ஒரு வரன் வந்திருக்கிறது. சுந்தரம் ஆச்சியைப் பொறுத்த வரை அது குபேர வரம் கிடைத்த மாதிரி அவர்கள் வலை போட்டுத் தேடினாலும் கைக்கு வராத அப்படியொரு தேவ புருஷன். அவள் நினைவில் தான் அப்படி

சுந்தரிக்கு அந்தக் குபேர பாக்கியத்தை விட இது வரை உயிரென நம்பி வாழ்கின்ற சத்திய தரிசனமான வழிபாட்டினைக் குறிக்கும் பெருமைக்குரிய தனது ஆத்மாவாகவே உள்ளத்தில் நிலை கொண்டு பதிந்து போயிருக்கும் தன்னுடைய சைவ சமயமே பெரிதென்றுபட்டது .ஓர் ஏழையாகப் பிறந்ததற்கு இவ்வளவு பெரிய தண்டனையா? சீ நினைக்கவே மனம் கூசுகிறது அருளம்மா டீச்சர் வீடு தேடி வரும் போதே நினைத்தாள் ஏதோ விபரீதம் நடக்கத்தான் போகுதென்று அது தனக்குத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோண்டப்படுகிற புதைகுழி தானென்று காலம் கடந்த ஞானமாய் இப்போது தான் உறைக்கிறது அருளம்மா டீச்சர் கிறீஸ்து சேவகியாகவே இருந்து விட்டுப் போகட்டும் அதற்கு உருட்டுவதற்கு இல்லை பலிக்கடா ஆக்குவதற்கு என் தலை தானா கிடைத்தது?

அவ சைவப் பள்ளிக்கூடத்திலை பாலர் வகுப்புக்குப் படிப்பிக்கும் ஒரு சாதாரண டீச்சர் இதையும் தாண்டி ஒரு கல்யாணத் தரகராக மட்டுமல்ல மதத்திற்கும் ஆள் சேர்க்கும் ஒரு கூலிப் படையாகவும் வேஷம் தரித்து அவ படியேறி வந்த போதே அம்மாவுக்கு அது உறைக்காமல் போனது ஏன்? எல்லாம் அவவின்ரை கோழைத்தனமான கையறு நிலைமை தான் ஆனால் நான் அப்படியில்லை எனக்குள்ளை அசாத்தியமான விழிப்பு நிலையிருக்கு பிறக்கிற போதே பிள்ளையார் கோவில் மணியைக் கேட்டே கண் விழிச்சவள் நான் ஒரு நாளைக்கு மறந்து போயோ வேறு காரணம் கருதியோ திருநீறு பூசாமல் விட்டால் மூதேவி பிடிச்ச மாதிரி எனக்குள்ளே வெறுமை சூழ்ந்து வருத்தும் அப்படிச் சைவ பாரம்பரிய பெருமைகளுக்காக உயிரைக் கொடுத்து வளர்ந்த எனக்கா இப்படியொரு தண்டனை?

"சுந்தரி என்ன பிள்ளை யோசிக்கிறாய்?இப்படியொரு மாப்பிள்ளை கிடைக்க நீ கொடுத்து வைச்சிருக்க வேணும். இதை ஏன் நீ புரிஞ்சு கொள்கிறாயில்லை?" என்று குரல் சூடேறிக் கேட்டாள் சுந்தரம் ஆச்சி

"என்ன பெரிய மாப்பிள்ளை? பாங்கிலை வேலை. கை நிறையச் சம்பளம் இதனாலை எங்கடை வறுமை ஒழிஞ்ச ஒரு வாழ்க்கை கிடைக்குமென்று நீ நம்புறாய். என்னாலை அப்படி யோசிக்க முடியேலை. அதை விட முக்கியம் எல்லா வழிகளிலும் எங்களை நல் வழிப்படுத்தி ஈடேற்றுகின்ற சமயம் தான். எங்களுக்குக் கண் போல இருக்கிற, அதை விற்றுச் சித்திரம் வாங்க நான் ஆசைப்படேலை இது ஒரு போதும் நடக்காது "

"என்ன விசர்க் கதை கதைக்கிறாய்?வலிய வாற சீதேவியைக் காலால் உதைக்கிற மாதிரி இப்படி மறுத்துப் பேசுறதுக்கு உனக்குள்ளை அப்படி என்ன பெரிசாய் முளைச்சிருக்கு?

"அம்மா! அதைச் சொன்னாலும் உனக்கு விளங்கப் போறதில்லை சைவத்துக்காக நான் உயிரையும் விடுவன் வெறும் தசை வாழ்க்கைக்கு ஆசைப்பட்டு அப்படி வாற ஆன்மீக பலத்தை எப்பவும் நான் இழக்கப் போறதில்லை. எனக்குக் கல்யாணம் ஒன்று நடக்காட்டாலும் பரவாயில்லை காலம் முழுக்க நான் இப்படியே இருந்திட்டுப் போறன் என்னை விட்டிடுங்கோ"

"அப்ப நீ வழிக்கு வர மாட்டியே நாளைக்கு அருளம்மா டீச்சர் வந்தால் நான் என்ன சொல்லுறது?"

"இதுக்கு வேறை ஆளைப் பாருங்கோ என்று வாயைத் திறந்து சொல்ல வேண்டியது தான் "

"என்னாலை முடியாது நீயே இதைச் சொல்லு அவவிட்டை"

அருளம்மா டீச்சரோடு அவர்களுக்கு நீண்ட காலப் பழக்கம் அவள் ஒரு தனிக் கரக்டர் சிரிப்பொழுகப் பேசியே ஆளை மயக்குகிற சுபாவம் அவளுக்கு ஊரிலே அவளைத் தெரியாத ஆட்களே இல்லை எப்படியாவது இருந்து விட்டுப் போகட்டும் காலையில் அவள் வரும் போது தர்க்கரீதியாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைக்க வேண்டிய விடயங்கள் குறித்துத் தனக்குள் பேசி ஒத்திகை பார்க்கிற நிலைமையில் சுந்தரிக்கு இந்த உலகமே அடியோடு மறந்து போயிற்று. இரவு சாப்பிடக் கூட மனம் வரவில்லை சுந்தரம் ஆச்சி பல முறை கூப்பிட்டுப் பார்த்தும் பேசாமல் இழுத்துப், போர்த்துக் கொண்டு படுத்து விட்டாள் கவலை மிகுந்து நித்திரையாகப் பாதி மயக்கத்தில் இருந்த போது கனவில் ஒரு குரல் கேட்டது

"அக்கா" எழும்பு நான் ஒரு கதை சொல்லுறன் கேக்கிறியே?"

குரல் கேட்டு அவள் கண் விழித்துப் பார்க்கிற போது இருட்டிலே முகம் தெரியவில்லை. குரல் அடையாளம் கண்டு சுரத்தின்றிக் கேட்டாள்

"என்ன தங்கா? அம்மாவுக்குத் துணையாக நீயும் எனக்குத் தர்மோபதேசம் பண்ணப் போறியே?"

தங்கா என்ற அந்தத் தங்கரத்தினம் அவளுக்கு நேரே இளையவள்

"நான் அதுக்கு வரேலை"

அப்ப எதுக்குச் சாமத்திலை வந்து என்னைக் குழப்புகிறாய்?

"இப்ப நான் சொல்ல வாறது என்னெண்டால் நீ வேண்டாமென்று உதறித் தள்ளுறியே அந்த வேதக்காரப் பெடியனைக் கட்டுறதுக்கு, எனக்கு முழுச்சம்மதம் நாளை அருளம்மா டீச்சர் வந்து உன்னைக் கேக்கேக்கை நீ பயப்படாமல் இதைச் சொல்லக்கா உனக்குப் பதிலாக நான் போறன் "

"என்ன விளையாடுறியே ? கண்ணை வித்து அப்ப நீ சித்திரம் வாங்கத் துணிஞ்சிட்டியே?"

"எதக்கா கண்? இஞ்சை பசியிலை எங்கடை வயிறெல்லாம் பத்தியெரியுது போற போக்கிலே உயிரே மிஞ்சாது இதிலை கண்ணைப் பற்றி நீ பேசுறது சுத்த அபத்தமாக இருக்கு எங்களுக்காக நீ ஒன்றும் தியாகம் செய்ய வேண்டாம் அம்மா பாவுமல்லே அிதைக் கூட மறந்திட்டியே தினமும் காய் கறி விக்கிறதுக்காக நடு மத்தியான வெய்யிலிலை கிடந்து மனுஷி சாகுது அதைக் காப்பாத்தவாவது இதுக்கு நீ இணங்கலாம் தானே"

"போதும் நிறுத்து எனக்கு வேலை கிடைச்சிட்டால் அம்மாவை வீட்டிலை வைச்சு ராணி மாதிரி நான் காப்பாற்றுவன். நீ ஒன்றும் எனக்கு வழி சொல்லித் தர வேண்டாம். உனக்கு இஷ்டமெண்டால் நல்லாய் அந்த வேதக்காரனோடு போ நான் ஒன்றும் உன்னைத் தடுக்க மாட்டன் இப்ப என்னைப் படுக்க விடு"

மறு நாள் அதிகாலை ஆறு மணிக்கே எழுந்து காய் கறி வியாபாரம் செய்வதற்காக சுந்தரம் ஆச்சி புறப்பட்டுப் போனாள்.. அது அருளம்மா டீச்சரின் வருகைக்கு முகம் கொடுக்க முடியாமல் போன காரணத்துக்காகவும் இருக்கலாம்... அவள் புறப்பட்டுப் போன கையோடு சில நிமிடங்கள் கழித்து பாடசாலைக்குப் போகுமுன்பே ஆச்சியிடம் தனது வேண்டுதலுக்கான விடை கேட்டறியப் படலை தாண்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருளம்மா டீச்சர் வரும் போது வழக்கமாக ஆச்சி அமரும் சிம்மாசனமல்ல திண்ணை வெறிச்சோடி இருள் அப்பிக் கிடந்தது

முகம் குழம்ப உள்ளே வந்த டீச்சர் செய்வதறியாது மௌனம் கனத்து நிற்கிற போது "வாங்கோ டீச்சர்" என்றபடி உள்ளிருந்து தங்கரத்தினம் வெளிப்பட்டு வந்தாள்

" என்ன தங்கா நீ வாறாய்? அவசரமாய் நான் கதைக்க வந்தது ஆச்சியோடல்லே"

"எனக்குப் புரியுது டீச்சர் நீங்கள் என்ன கேக்கப் போறியளென்பது, தெரிந்ததாலே இப்ப நான் சொல்லுறன் நீங்கள் கேக்கிறதுக்கு இணங்கி மதம் மாறி நீங்கள் சொல்லுற பெடியனைக் கட்ட அக்கா சம்மதிக்கேலையென்று எனக்கு வருத்தமாக இருக்கு அதுக்குப் பதிலாய் நான் ஒரு முடிவோடு இப்ப வந்திருக்கிறன், எங்களுக்காக அம்மா படுற கஷ்டத்துக்காக நானே மனம் விரும்பி எடுத்த முடிவு தான். இது. என்ன தெரியுமோ? இதிலே எனக்கு முழுச் சம்மதம் நான் உங்கடை மதத்திற்கு வாறன். எனக்கு இதைச் செய்து வையுங்கோ"

" சந்தோஷம் தங்கா! ஏழாலை கிழக்கிலே அவையள் பெரிய ஆட்கள் அந்தோனியின் மகன் பீட்டர் ஒரு அக்கா மட்டும் அவனுக்கு இருக்கு நீ அங்கை போனால் ராணி மாதிரி வாழலாம் முதலிலை உனக்கு ஞானஸ்தானம் நடக்க வேணும் அப்புறம் தான் சர்ச்சிலே உங்கடை கல்யாணம் வெகு சிறப்பாக நடக்கப் போகுது ஆச்சியோடை பின்னேரம் வந்து இதைப் பற்றிக் கதைக்க வேணும். இப்ப எனக்கு நேரம் போகுது நான் போயிட்டு வாறன்"

"போயிட்டு வாங்கோ டீச்சர்"

அவள் வெற்றிகரமாகச் சாதித்த களை மாறாமல் திரும்பி அறைக்குள் வரும் போது ஜன்னலடியில் முகம் கறுத்து சுந்தரி ஜடமாக வானத்தை வெறித்துப் பார்த்த வண்ணம், வெறும் நிழலாக நின்று கொண்டிருப்பதை ஓர் காட்சி அவலமாக அவள் எதிர் கொள்ள நேர்ந்தது இனியும் அவளுக்கு ஏன் இந்த மன வருத்தம் என்று பிடிபடாமல் அவளருகே போன தங்காவை முகம் நிமிர்ந்து பார்க்க மனம் கூசி உயிரையே பறி கொடுத்து விட்ட மாதிரி ஆற்றாமையோடு மனம் கலங்கி அவள் கேட்டாள்

"அடீ பாவி என்ன காரியம் செய்து விட்டு வந்து நிக்கிறாய்? இப்படிக் கண்ணை வித்துச் சித்திரம் வாங்க அப்படி என்ன அவசரம் உனக்கு வந்திட்டுது? சொல்லடி"

"அக்கா கோபப்படாதையக்கா எல்லாத்தையும் விட உனக்குச் சமயம் பெரிசாய் படலாம் எனக்கு அப்படித் தோன்றேலை அதை விடப் பசி முக்கியமல்லே அம்மா படுற கஷ்டத்துக்காகத் தான் இப்படியெல்லாம் மாற வேண்டியிருக்கு "

"போதும் நிறுத்து வெறும் தசை நினைவுகளுக்காக உயிரை இப்படி விக்கிறது கேவலமாகப்பட வில்லை உனக்கு? போ என்ரை முகத்திலை முழிக்காதே இனி நானும் நீயும் உடன் பிறப்பு என்பதை ஒரு கெட்ட கனவாக நான் மறந்து போய் விடுறன் திருநீறு என் நெற்றியில் இருக்கும் வரை இது அழியாது"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையில் சுந்தரியின் திருநீறு வியாக்கியானம் குறித்த சங்கதிகள் உள்ளார்ந்த தெய்விகப் பொலிவுடன் அவள் ஆன்மீகஞானத்தில் கரை கண்டு தேறிய ஒரு தீவிர இறை பக்தி கொண்ட சமய வாதியாய் இருளிலும் ஒப்பற்ற ஒளித்தேவதையாய் வானில் நிலை நின்று மின்னிச் சுடர் விடவே என்று பிடிபடாமல் மதம் மாறிக் கல்யாணம் செய்யப் போகின்ற களிப்பு மாறாமல் தங்கா கண்ணை விற்றுச் சித்திரம் வாங்குகிற மனதின் கனம் மாறாமல் அவ் அறையை விட்டு நிழல் பிரிந்து போகிற போது அவள் உயிர் தரித்து நின்ற அறையும் இருள் கவிந்து மூடிக்கிடப்பதாய் சுந்தரிக்கு உணர்வு தட்டிற்று இப்படிப் புறம் போக்கான இருளே பழக்கப்பட்ட நிலையிலும் தனது உயிர்ப் பிரக்ஞையான விழிப்பு நிலையில் உடலைக் கவ்வுகின்ற அந்த இருள் கூட அடியோடு தனக்கு மறந்து போகுமென்று அவள் மிகவும் பெருமிதத்துடன் நினைவு கூர்ந்தாள்

தங்காவை நினைக்கும் போது கோபம் வருவதற்குப் பதிலாக அவளின் தரங்கெட்ட ஈனச் செயலை எண்ணி மனதில் கழிவிரக்கம் தான் மிஞ்சியது. அவர்களுடைய விளையாட்டுப் பருவத்தில் வீட்டுக்குப் பக்கத்திலேயுள்ள பனந்தோப்புக்கு வந்து பசியைப் போக்குவதற்காக அவள் பனம்பழம் எடுத்துக் கஷ்டப்பட்டுத் தோலுரித்துக் களி உண்ணும் போது களைப்பு மேலீட்டினால் முகமெல்லாம் வியர்த்துக் கொட்டி அந்த வியர்வை மழையோடு பனங்களியும் கலவையாய்ச் சேர்ந்து அவள் சிவந்த கன்னமெல்லாம் ஊற்றெடுத்து வழிகிற அழகைப் பார்த்தவாறே சுந்தரி மெய் மறந்து நின்ற தருணங்கள் போய் காலக் கொடுமையால் அந்தப் பசிக்கு இரையாக இப்போது அவள் எல்லாமே விட்டொழிந்து ஒரு சூனிய இருப்பு நிலையில் மதம் மாறித் தங்கள் பெருமையெல்லாம் இழந்து தனிமைப்பட்டு நிற்கப் போவதை எண்ணச் சிறு வயது ஞாபகப் பொக்கிஷமாய் மனதில் சுடர் விட்டு மின்னுகின்ற அந்த பனங்காய்ச் சொக்குச் சிவப்பழகு கூடக் கறைபட்ட பொய்யான ஒரு நிழல் தோற்றமாய் அவள் மனதை விட்டு, அடியோடு வேர் கழன்று மறைந்து போனது சோற்றுக்கு ஆசைகாட்டி அதற்காக இங்கே உயிர் விடப் போவது தங்கா மட்டுமல்ல தமிழும் சேர்ந்து சாகுமென்று அவள் பெரும் ஆற்றாமையோடு நினைவு கூர்ந்தாள்


## 'தாயக ஒலி' சந்தா விபரம்

ஒரு வருடச் சந்தா : ரூபா 900(அஞ்சல் செலவுடன்)

வெளிநாடு : $30(U.S), £20(U.K)

உங்கள் தாயக ஒலியின் வளர்ச்சிக்குச் சந்தாதாரர்களாகச் சேர்ந்து ஆதரவு நல்குங்கள்.

**தொடர்பு :**

| திருமலை பாலா | வங்கிக் கணக்கு விபரம் |
|---|---|
| (Thirumalai Bala) | T.Sivasupramaniam |
| London | A/C No : 8100086490 |
| 07956486014 | Commercial Bank |
| | Wellawatte, Sri Lanka |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆமையும் முயலும் - புதிய கூற்று

## (A New Version)

வடகோவை பூ.க.இராசரத்தினம்

முயலின் கோபம் கொந்தளித்தது. முதல் நாள் தான், முயல் தமது இனத்துக்கு துரோகம் விளைவிக்கப்பட்டது பற்றி அறிய நேர்ந்தது.

"சற்று கற்பனை பண்ணிப்பாருங்கள். ஆமை ஓட்டப் பந்தயத்தில் முயலை வென்றதாம்" முயல் ஆத்திரத்துடன் தனக்கே கூறியது.

"சரித்திரத்தை நான் தான் மாற்ற வேண்டும். நான் வேகத்தில் புயல். எனது மதிப்பென்ன? அந்தஸ்து என்ன?"

மறுநாள் அண்மையில் உள்ள ஆமையிடம் சென்றது.

"உன்னையும் உனது இனத்தையும் ஏமாற்றிப் பிழைப்பவர்கள் என கூறவேண்டியுள்ளது என்பதை கவலையுடன் தெரிவிக்கின்றேன்."

ஆமை குழப்பமடைந்தது. ஆச்சரியமடைந்தது. அப்பட்டமான கூற்றுக்குரிய காரணத்தை வினாவியது.

"உனது மூதாதையார், எனது மூளை குறைந்த மூதாதையர் ஒருவரை மரதன் ஓட்டப் போட்டியில் தோற்கடித்துள்ளார். இது எனது இனத்துக்கு, எமது பாரம்பரிய சரித்திரத்திக்கு ஒரு அவமதிப்பாக உள்ளது. களங்கத்தை ஏற்படுத்தியுள்ளது. நான் சவால் விடுகின்றேன். என்னோடு ஓடுவதற்கு சம்மதமா?" என முயல் முழங்கியது.

ஆமைக்கு அந்த சம்பவம் ஞாபகத்துக்கு வந்தது. புன்முறுவலுடன் மெதுவாக் கூறியது - எமது மூதாதையர் ஏமாற்றவில்லை. அவர் ஒரு வீரராவார், கடின உழைப்பாளி, வெற்றி அடைந்தார். உமது மூதாதையர் ஒரு சோம்பேறி, உதவாக்கரை, எனவே குறுகிய நேரம் நித்திரை கொண்டார். எப்படியிருந்தபோதிலும் நான் உமது சவாலை ஏற்கின்றேன். இடம், காலம், நேரம் போன்ற ஒழுங்குகளை மேற்கொண்ட பின் எனக்கு அறிவிக்கவும். சர்வதேசக் கண்காணிப்பாளர் சமூகத்தில் தான் இடம்பெற வேண்டும் எனெனில் இது சரித்திரத்தில் பொறிக்கப்பட்டுவிடும்.

ஒழுங்குகள் முறையே மேற்கொள்ளப்பட்டன. இருவரும் தத்தமது பாரம்பரியத்தையும் அந்தஸ்தையும் காப்பாற்ற வேண்டுமென்ற தீர்மானத்தை மேற்கொண்டார்கள்.

"எனது பொறுப்பற்ற மூதாதையர் போல் ஓடும்பாதையில் நான் நித்திரைகொள்ள மாட்டேன். விரைவாக ஓடி முடித்தபின் ஆமை தோற்றபின் தான் நித்திரை செய்வேன்" என முயல் தனக்குத்தானே கூறியது.

ஆமை வழமை போல் தனது மூதாதையர் போன்று மொதுவாக நகரத் தொடங்கியது. முயலும் ஓட ஆரம்பித்தது. இரண்டு போட்டியாளர்களுக்கும் இடையில் இரண்டு மைல் தூர வித்தியாசம் காணப்பட்டது.

இவ்வேளையில் துவிச்சக்கர வண்டியில் மீன் விற்கும் வியாபாரி விற்று முடித்தபின் மீன் பெட்டியுடன் துவிச்சக்கர வண்டியில் விரைவாகச் சென்று கொண்டிருந்தார். வழியில் ஆமை ஒன்று விரைவாக நகர்ந்து கொண்டிருப்பதைக் கண்டார். "கடவுளே, மீன்கள் முழுவதையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


விற்பனை செய்த எனக்கு இப்படி ஒரு நல்ல கறியைச் சமைப்பதற்கு ஆமையை தந்துள்ளீர்களே" என தனக்குத்தானே கூறினான். ஆமையை எடுத்து பெட்டிக்குள் போட்டான்.

"நல்ல ஆமை இறைச்சி கிடைத்திருக்கிறது. நண்பர்களுடன் பகிர்ந்து உண்ண வேண்டும். அவர்கள் மகிழ்ச்சி அடைவார்கள்" எனக் கூறினான். விரைவாக துவிச்சக்கர வண்டியைச் செலுத்தினான். ஆமை தலையை உயர்த்தி வீதியைப் பார்த்தது.

"முயலாரே இது எனது இறுதிப் பயணமாக அமையலாம் ஆனால் நான் உன்னைத் தோற்கடித்து விட்டேன். நீ சரித்திரத்தை மாற்ற முடியாது" என உரத்துக் கூறியது. எனவே ஆமை முயலை வென்ற கதை தொடர்ந்தும் இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

**நகைச்சுவைக் கதைகள்**

# "அசத்தலான மனைவி"



ஒரு ஊரில் ஒரு மந்திரயவாதியும், அவனது மனைவியும் வசித்து வந்தார்கள். மந்திரவாதி கெட்டிக்காரன்.அந்த ஊரிலும் அயலிலுள்ள ஊர்கள், நகரங்களில் மந்திர வித்தை நிகழ்ச்சிகள் செய்து பேரும், பெரும் புகழும், பணமும் சம்பாதித்து வந்தான். அவனுக்கென்று பெரிய இரசிகர் கூட்டமே இருந்தது.

ஆனால் அவனது மனைவியோ தனது கணவனது மந்திர வித்தையை ஒருபோதும் இரசிப்பதுமில்லை, பாராட்டுவதுமில்லை. மாறாக, ஒவ்வொரு வித்தை பற்றி ஏதாவது குற்றம் குறை கூறிக்கொண்டே இருப்பாள். மந்திரவாதி இதனால் சற்றுக் கவலையடைந்தார்.

அவளுக்குப் பாடம் படிப்பிக்க எண்ணி ஒருநாள் ஒரு சாது வேடம் பூண்டு வானத்தில் பறந்தார் - மனைவியும் சாது பறப்பதை ஜன்னல் வழியே பார்த்து இரசித்து, அதிசயித்தாள்.

கணவன் வீடு திரும்பியதும் "பார்த்தீர்களா இன்று ஒரு சாதுவானத்தில் பறந்ததை? மந்திரவாதி என்றால் அப்படியல்லவா இருக்க வேண்டும்? நீங்களும் செய்கிறீர்களே மந்திரவித்தை?" என்று கேலியாகச் சொன்னாள்.

மந்திரவாதியும் சாதுவாக மாறி கம்பீரமாக "நான்தான் வானத்தில் பறந்தேன் எப்படி?" என்று அட்டகாசமாகக் கேட்டார்.

விட்டாளா பத்தினி? " அதுதானே பார்த்தேன்! என்ன நேர்கோட்டில் பறக்காமல், கஷ்டப்பட்டு வளைந்து வளைந்து பறக்கிறாரே என்று! அது நீங்கள்தானா?" என்றாளே பார்க்கலாம்!

மந்திரவாதி மயக்கமடைந்தார்!

- இணுவை இரகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை — கா.துவாலன்

# டொனேஷன்

ஆறு மாத காலம் முட்கம்பி முகாமில் வாழ்ந்து கஷ்டப்பட்டபின் மீள் குடியேற்றத்துக்காகத் தமது சொந்த ஊரான மாமூலைக்கு வந்து சேர்ந்தனர் மாணிக்கவாசகம் குடும்பத்தினர்.

இவர்கள் குடியிருந்த காணியில் வீடு வாசலைக் காணவில்லை. வேலிக் கட்டைகளையும், முட்கம்பிகளையும் கள்வர் அகற்றியிருந்தார்கள். காணியையும் காணிக்குப் போகும் ஒழுங்கையையும் முட் பற்றைகள் முற்றாக மூடியிருந்தன. மாணிக்கவாசகமும் மகன் ராகவனும் தமது காணியிற் காணப்பட்ட முட் பற்றைகளை வெட்டி வெளியாக்கத் தொடங்கினர்.

இவ்வாறு முழுக்காணியும் துப்பரவாக்கி முடிய இரண்டு கிழமை எடுத்தது. வெட்டிய மரங்களை எரித்து முடித்ததும் காணிக்குட் சுதந்திரமாகப் போய் வரும் நிலைமை ஏற்பட்டது.

காணிக்குச் செல்லும் பாதை பொதுப் பாதையாக இருந்த போதிலும் அதில் வளர்ந்திருந்த முட் பற்றைகளை வெட்டி வெளியாக்க எவரும் முன்வரவில்லை.

மாணிக்கவாசகம் தனியாகவே பற்றைகளை வெட்டி வெளியாக்கி வேர் பிடுங்கிப் பாதையைப் போக்குவரத்துக்கு ஏற்ற மாதிரிச் சீராக்கினார். அதன்பின்னர் இப்பாதையால் ஆட்டோக்கள் உறுமிக் கொண்டோடியதைப் பார்க்க முடிந்தது.

மீள்குடியேற்ற அலவன்சாக அரசாங்கத்திடமிருந்து மாணிக்கவாசகம் 25000/= ரூபாவைப் பெற்றுக் கொண்டார். அரசாங்கம் கொடுத்த கூடார உபகரணங்களைக்கொண்டு கூடாரம் அமைக்கப்பட்டது. வீடமைப்புக்கான நிதியை இந்திய அரசிடம் பெற்று வீடு கட்டும் வேலையும் ஆரம்பிக்கப்பட்டது.

மாணிக்கவாசகத்தின் மகன் ராகவன் ஏற்கனவே இடையில் விட்டிருந்த கம்பஸ் படிப்பைத் தொடர்வதற்காக யாழ்ப்பாணத்துக்குச் சென்றுவிட்டான்.

அத்திவாரம் கட்டிச் சுவர் எழுப்பிக் கோப்பிசம் போட்டு முடிந்ததும் "இந்த அளவுக்காவது தமக்கென்று வீடொன்று கிடைத்து விட்டதே" என்று எண்ணிச் சந்தோஷத்தில் மிதந்தனர் மாணிக்கவாசகம் குடும்பத்தினர். சுவர்களுக்குப் பூசப் பூசி நிலத்துக்குக் கல்லும் சாந்தும் போட்டு மொங்கான் அடித்து அறைக் கதவுகளும் யன்னல் கதவுகளும் போட்டு முடிந்தது. "இனியும் நாங்கள் அகதிகள் அல்லர்" என்ற ஒரு நிம்மதியான உணர்வு இவர்களிடம் ஏற்பட்டது.

கிணற்றை இறைத்துக் குளோரின் போட்டுத் தண்ணீரை அள்ளிப் புளங்கத் தொடங்கினார்கள். கிணற்றடியில் ஐந்தாறு வாழையும், கமுகுகளும் நட்டு நீர் ஊற்றி வளர்த்தார்கள்.

வாழைகள் நன்றாக வளர்ந்து நிழல் பரப்பிக் காற்றில் அசைந்தாடிக் கொண்டு நின்ற போது அந்தமாதிரி மகிழ்ச்சி ஏற்பட்டது மாணிக்கவாசகம் குடும்பத்திற்கு.......................

ராகவன் படிப்பு முடிந்து திரும்பி ஊருக்குவந்து தண்ணீரூற்றில் ஒரு ரியூட்டரியில் இணைந்து படிப்பிக்கத் தொடங்கினான். பட்டதாரி என்ற தகுதியை வைத்துக்கொண்டு ஊரில் உள்ள உறவினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலரும் ராகவனுக்குத் திருமணம் பேசத் தொடங்கினார்கள். ஆட்கள் திருமணம்பேசுகிறார்கள் என்ற தகவலை மகனிடம் சொன்ன ஜெயலஷ்மி நிரந்தர வேலை கிடைத்த பின்னர்பெரிய இடமாகப் பார்த்து அதிக சீதனம் டொனேஷன் வாங்கினாற் தான் தங்கை விஜயலஷ்மிக்கு நல்ல இடத்தில் திருமணம் செய்யலாம் என்று அம்மா மகனுக்கு உபதேசம் செய்தா.

ராகவனுக்கு அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை. "அம்மா என்னுடன் கம்பசில் படித்த பிரியா என்ற பிள்ளையை நான் விரும்புகிறேன். திருமணம் செய்வதாக வாக்குறுதி கொடுத்தபின் எவ்வாறு வேறிடத்தில் திருமணம் செய்வது? "என்றான் ராகவன்.

யாரைக் கேட்டு வாக்குறுதி கொடுத்தாய்? யாழ்ப்பாணத்துக்கு உன்னைப் படிக்கத்தானே அனுப்பியது. திருமண வயதில் தங்கையொருத்தி இருப்பது தெரிந்துகொண்டும் உன்பாட்டில் காதல் விவகாரங்களில் இறங்குவாய்என்று நான் எதிர்பார்க்கவேயில்லை. நான் அப்பாவிடடைச் சொல்லிவிடுறன் அவரோடை கதைச்சுக்கொள்" என்று அம்மா சொல்லி முடித்தபோது அவவின் கண்களிலிருந்து கண்ணீர் பொல பொல என்று வழிந்தோடியது.

அப்பாவுக்கு விடயம் தெரியவந்தபோது அவர் சொன்னார் "அவையள் எங்கடை சாதிக்காறராகவும் சீதனம் டொனேஷன் தரக்கூடிய ஆக்களாகவும் இருந்தால் கதைச்சுப் பாக்கலாம்" என்று.

"அப்பா! அவையள் எங்களைப் போலவே நடுத்தரவர்க்கம்தான். டொனேஷன் எதிர் பாக்க ஏலாது. நான் கம்பசிலை விவாத மேடையிலை ஏறி "நாங்கள் சீதன வழக்கத்தை முற்றாக ஒழிக்கவேணு"மெண்டு வீராவேசமாய்ப்பேசினனான். கலியாணமெண்டு வரேக்குள்ளைசீதனம் வேணுமெண்டு பிரட்டிப் பேசினால் சினேகிதர் சொல்லுவாங்கள் "இவன் ஒரு இரட்டை வேடதாரி"யெண்டு என்றான் ராகவன்.

"வீடு வளவு வாங்காமல் திருமணம் செய்துபோட்டு எங்கை சீவிக்கிறது? உனக்கெண்டு ஒரு இல்லிடம் வேணும்தானே! மற்றது எங்கடை ஆக்கள் பொம்பிளை போட்டிருக்கிற நகைகளைப் பாத்துத்தான் ஆக்களை எடைபோடுறது. அது மட்டுமல்ல தாலிக்கொடி எத்தனை பவுணிலை செய்தது எண்டும் ஆக்கள் கூர்ந்து கவனிப்பினை. அதோடை காசு களஞ்சு கையிலை இல்லாவிட்டாலும் சனம் மதிக்காதுகள். நான் கம்பசிலை படிக்கவில்லை ஆனால் நடைமுறை அனுபவத்தை வைச்சு உனக்குப்புத்திமதி சொல்லியிருக்கிறன். மற்றது டொனேஷன் வாங்காமல் தங்கச்சிக்கு எப்பிடித் திருமணம் செய்யுறது என்பது அடுத்த பிரச்சினை. என்னவோ யோசிச்சுச் செய்" என்று கூறித் தனது உரையை முடித்துக்கொண்டார் அப்பா.

ராகவன் பதில் ஒன்றும் கூறவில்லை. தம்பாட்டில் எவரையாவது காதலிப்போர் பெற்றோர்முன்னால் குற்றவாளி போல நிற்பது வழமையான விடயம்தானே.

இவ்வாறு இருக்கையில் ஒரு நாள் தண்ணீரூற்று ஆலடியில் நடந்த அக்சிடெனரில் அகப்பட்டு காலில் படுகாயம் அடைந்த ராகவன் கால் மைல் தூத்திலுள்ள மாஞ்சோலை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப் பட்டான் விடயமறிந்து மாணிக்கவாசகமும் மனைவியும் மகளும் ஆஸ்பத்திரிக்கு விரைந்தார்கள். அங்கிருந்து அம்புலன்சில் ராகவனை யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றார்கள். மாணிக்கவாசகமும் மகனுடன் கூடச் சென்று மகனுக்கு உதவியாக வாட்டில் நின்றுகொண்டார்.

பிரியாவும் அவளது பெற்றோரும் விடயம் அறிந்து பதறிப்போய் அடிக்கடி ஆஸ்பத்திரிக்கு விஜயம் செய்து இருவருக்கும் உதவிகள் செய்ததோடு சாப்பாட்டு விடயத்திலும் குறைவில்லாமல் பார்த்துக்கொண்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராகவனின் பெற்றோரும் பிரியாவின் பெற்றோரும் ஆஸ்பத்திரியில் அடிக்கடி சந்தித்தமையால் விரும்பியோ விரும்பாமலோ அவர்களுக்கிடையே ஒரு புதிய உறவு உருவாகி வளர ஆரம்பித்தது. அதுமட்டுமல்ல ராகவனின்தங்கைக்கும் தனது எதிர்கால அண்ணியைப் பிடித்துக்கொண்டது.

ஒரு கிழமைக்குப் பின்னர் ராகவன் ஊன்றுகோலின் உதவியுடன் மெல்ல நடக்க ஆரம்பித்தான். இன்னும் ஒரு கிழமையால் டீஸ்சார்ஜ் செய்யலாம் என்று டொக்டர் கூறியபோது பிரியாவும் ராகவனும் ஒருவரையொருவர் அர்த்தபுஷ்டியுடன் பார்த்துப் புன்னகைத்தார்கள். இவர்களின் மகிழ்ச்சியைக் கண்ணுற்று அனைவரும் மெய்மறந்து நின்றார்கள்.

## மொழியின் பயன்பாடு

"ஒருவனது சகலதுறைச் சிந்தனை விரிவுக்கும் அவனது மொழி ஆற்றலே அடிப்படை" "மனித இனத்தின் இன்றைய முன்னேற்றத் திற்கே மொழிப் பயன்பாடுதான் முக்கிய காரணம்" இவை ஆராய்ச்சியாளர் முடிவுகள்.

மனித இலட்சணமாக மட்டுமன்றி உணவு, உடை, உறையுள் போன்ற ஓர் அடிப்படைத் தேவையுமாகிவிட்ட கல்வியை அவனை வாழ்விக்குங் கல்வியாக மாற்றுவதில் மொழித்தேர்ச்சியின் பங்களிப்பு முதன்மை வாய்ந்தது. மானுடத்தின் விசேட அறிவு பகுத்தறிவு. பகுத்தறிவின் சிறந்த பெறுபேறு நியாய உணர்ச்சி, பகுத்து, நியாயித்து அறிவதற் குரியதான இலக்கணத்தைக் கற்றவன் நியாய உணர்ச்சி பெற்றவனுமாகின்றான். இவ்வுண் மைகளை மாணவர்களும், பெற்றாரும் தெளிந்து ஆதாயப்பட வேண்டும்.

இத்துணை ஆற்றல்கள், நுட்பங்கள் பொலியும் மொழிகளைத் தனி மனிதர்களோ, சமூகங்களான மனிதர்களோ ஆக்கியிருக்க முடியுமா என்று பிரமித்து, மொழிகள் கடவுளின் நேரடி ஆக்கங்களே என மனிதர் சிலர் வாதிடும் அளவுக்கு மொழிகளுக்கு இன்று வரை ஏற்பட்டுள்ள அதியற்புதக் கூர்ப்புநிலை, பழையன கழிதல், புதியன புகுதல் நிகழாமல் பொருந்தியிருக்க முடியாது. அதேவேளை மனித சமூகங்களின் பல நூறு சந்ததிகள் அரிதில் தேடித்திரட்டிப் பேணிய சேமிப்பு விழுமியங்களினை எந்த அளவுக்கேனும் ஒதுக்கித் தள்ளி, ஒரு மொழி நின்று நிலைத்திருக்க முடியாது.

வழக்கு மன்னனின் தயவில் உருவானது தான் மரபு மந்திரிசபை. ஆயினும் மரபு மந்திரி சபையின் முடிவுகளுக்கு, முடிந்தவரை கட்டுப் பட்டுச்செயற்படுவதுதான் வழக்கு. மன்னனுக்கு மாண்பு, மொழி அரசுக்குப் பாதுகாப்பு!

கல்வி வாய்ப்புச் சிலருக்கே என்றிருந்த ஒரு காலத்தில் மொழிக் கல்வி அவர்களுள் ளும் ஒரு சிலருக்கே என்ற நிலை இருந்தது. அந்த ஒரு சிலரின் முழுநேரப் படிப்புக்கென அமைந்த இலக்கண நூல்கள், கல்வி முறை கள், "சகலர்க்குமே ஏனைப் பாடங்களோடு இலக்கணக் கல்வியும் அவசியம்" என்றாகி விட்ட இற்றை நாளில் முழுமையாகப் பொருந் தும் என்பதற்கில்லை. தேவைக்கேற்ற மாற்றங் களை, கற்பிக்கும் முறைகளிலும் வழங்கப் படும் அளவு, கணக்குகளிலும் ஏற்படுத்த முயல் வதும், காலத்துக்கும் சேவைக்கும் பொருந்தும் புது நூல்களை ஆக்கித்தருவதும் மரபு மீறல்க ளாகா இலக்கண மரபில் மாற்றங்களை வலிந்து ஏற்படுத்தாமல் இருப்பதே அவசியம்.

**- பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15 ஆயிரம் விசேட இலங்கை வைத்தியர்கள் வெளிநாடுகளில்

## குறுகிய காலத்துக்காவது நாடு திரும்பவேண்டும் என்கிறார் ஜனாதிபதி

இலங்கை நாட்டின் 15 ஆயிரம் விசேட வைத்தியர்கள் வெளிநாடுகளில் பணியாற்றுகின் றனர் என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, குறுகிய காலமாவது நாடு திரும்பி சேவைகளை தொடர வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளார். அத்துடன் வைத்தியத் துறையில் கற்கை நெறிகளை பூர்த்தி செய்தவர்கள் நாட்டி னதும் மக்களினதும் தங்களது சொந்தங்களி னதும் நலன்களை பற்றி சிந்தித்து வெளிநாடு களில் வேலைவாய்ப்புக்களை தேடிச் செல்வதை குறைத்துக்கொள்ளுமாறும் ஜனாதிபதி வேண்டு கோள் விடுத்தார்.

நாட்டுமக்களின் அபிவிருத்தி எந்தளவில் இருக்கிறது என்பதை அந்தநாட்டின் சுகாதார நிலையை கொண்டேநிர்ணயிக்க முடியும். சுகாதாரம் மற்று கல்விதுறைகளில் தீர்மானங் கள் மேற்கொள்ளும் போது அதன் பெறுபேறுகள் உடனடியாகக் கிடைப்பதில்லை.

அவை நீண்டகால பெறுபேறுகளைக் தருவதாக இருக்கும். நோயற்ற மனிதர்களாக வாழ்வதற்கு மக்களின் அர்ப்பணிப்புகளும் இருக்கவேண்டும். வைத்தியர்களால் ஒரளவு பங்களிப்பைதான் இதில் செய்யமுடியும். மக்களுக்கு தங்களதும் தங்களது பிள்ளைகள் மற்றும் குடும்பத்தினதும் சுகாதாரம் தொடர்பில் அக்கறை அவசியம். நோயற்ற நாட்டை உருவாக் குவதற்கு புதிய வேலைத்திட்டங்கள் தேவை.

புகையிலை தொடர்பாக நீண்டகாலத் திற்கு முன்னதான கொள்கைகளை எம்மால் நடைமுறைப்படுத்த முடிந்துள்ளது. அதன் பெறுபேறுகள் உடனடியாக கிடைத்துவிடாது. புகையிலை தடுப்பு தொடர்பில் உறுதியாக செயற் படும் நாடு என்ற பெயர் ஐ.நா. மத்தியில் இலங் கைக்கு இருக்கிறது. சுகாதார சேவையில் மருத்துவர்கள் மற்றும் தாதிமார் பற்றாக்குறை கள் காணப்படுகின்றன. இது இன்று ஏற்பட்ட நிலைமை கிடையாது. நீண்டகாலமாக இருந்து வரும் பிரச்சினையாகும். பெரும்பாலானோர் நாட்டை விட்டுச் செல்வதே இதற்கு காரணமாக அமைந்துள்ளது. எந்தளவு தொழிநுட்பம் வளர்ந்தாலும் மனிதவள தேவையை ஈடுசெய்து விடமுடியாது. மருத்துவர்கள் மற்றும் தாதிமார் கள் நாட்டை விட்டுச் செல்வதே இதன் பிரதான பிரச்சினையாகியுள்ளது. தாதிமாரையோ அல்லது விசேட மருத்துவ நிபுணர் ஒருவரையோ சில மாதங்களில் உருவாக்கிவிட முடியாது.

நாட்டினதும் மக்களினதும் தங்களது சொந்தங்களினதும் நலன்களை பற்றிசிந்தித்து வெளிநாடுகளில் வேலைவாய்ப்புகளை தேடிச் செல்வதை குறைத்துக்கொள்ளுமாறு நாட்டை விட்டுச் செல்லும் வைத்தியர்கள் மற்றும் தாதிமா ரிடம் நான் வேண்டுகோள் விடுக்கிறேன். தற்போது இலங்கை நாட்டின் விசேட வைத்தியர் கள் 15 ஆயிரம் பேர் வெளிநாடுகளில் பணி யாற்றுகின்றனர். குறுகியகாலமொன்றுக்காவது இலங்கையில் வந்து பணியாற்றுமாறும் அவர்களையும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

நாட்டைவிட்டு செல்லும் வைத்தியர்க ளின் எண்ணிக்கை குறைவடைந்து வெளிநாட்டி லுள்ள வைத்திய நிபுணர்கள் இலங்கையில் வந்து பணியாற்றும் போது வைத்தியர்கள் பற்றாக்குறைகளை தீர்த்துக்கொள்ளமுடியும் என்பதுடன் சுகாதார சேவையை மேலும் மேம்படுத்தவும் முடியும். இதில் நாம் புரிந்துணர் வுடன் செயற்படவேண்டும் என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்ப்பு என்ன?

ஓர் ஊரில் குப்பன், அப்பன் என இருவர் இருந்தார்கள். இவர்கள் அவ்வூரில் கிட்டிப் புல்லில் கைதேர்ந்தவர்கள். இவர்களை அந்த விளையாட்டில் ஒருவரும் வெல்ல முடியாது. எனவே இவர்கள் புகழ் ஊர் ஊராகப் பரவத் தொடங்கியது. ஒவ்வொரு ஊருக்கும் சென்று வெற்றியோடு திரும்புவார்கள். தங்கள் ஊருக்கு பெருமைதனை சேர்த்தார்கள். இதனால் அவ்வூர் மக்கள் இவர்கள் எது கேட்டாலும் இல்லையென்னாது கொடுப்பார்கள்.

ஒரு சமயம் வேறு ஊருக்கு விளையாட்டு விடயமாக போக வேண்டி வந்தது. அவ்வூர்க் கிராமவாசிகள் இவர்களுக்கு வெள்ளரிப் பிஞ்சை உணவாக எடுத்துக்கொள்ளக் கொடுத்தார்கள். அதில் குப்பனுக்கு ஐந்து வெள்ளரிப் பிஞ்சும், அப்புனுக்கு மூன்று வெள்ளரிப் பிஞ்சும் கொடுத்தார்கள். அவர்கள் அதை எடுத்துக்கொண்டு தமது பயணத்தைத் தொடர்ந்தார்கள்.

வழியில் ஒரு வழிப்போக்கன் பசியால் அவதியுற்றான். அதைப் பார்த்த அவர்கள் எங்களிடம் வெள்ளரிப் பிஞ்சு தான் இருக்கு ஆனால் எங்களுக்கும் பசிக்கிறது. எனவே மூவரும் சேர்ந்து உண்ணலாம் என்று, அவர்கள் குப்பனிடம் ஐந்து வெள்ளரிப் பிஞ்சும், அப்பனின் மூன்று வெள்ளரிப் பிஞ்சுமாக எட்டு வெள்ளரிப் பிஞ்சையும் ஒரு வெள்ளரிப் பிஞ்சை மூன்றாக உடைத்து மூவரும் சமமாக உண்டார்கள்.

அந்த வழிப்போக்கன், என் பசியை தீர்த்த உத்தமர்கள் நீங்கள். எனவே இந்த எட்டு ரூபாவை வைத்துக்கொள்ளுங்கள் என்று குப்பனிடம் கொடுத்துச் சென்றான். அதில் குப்பன் ஐந்து ரூபாவைத் தான்வைத்துக் கொண்டு மூன்று ரூபாவை அப்பனிடம் கொடுத்தான். அப்பன் அதை வாங்க மறுத்தான். இருவரும் சமமான வெள்ளரிப் பிஞ்சை உண்டோம். நீ மட்டும் ஐந்து ரூபாவை எடுத்துக்கொண்டு எனக்கு மூன்று ரூபாவைத் தருகிறாயே இது நியாயமா? என்ற கேட்டான். சமமாகத் தா என்றான்.

அதற்கு குப்பன் என்னிடம் ஐந்து வெள்ளரிப் பிஞ்சு இருந்தது. உன்னிடம் மூன்று இருந்தது. எனவே தான் நான் ஐந்து ரூபாவை எடுத்துக் கொண்டு உனக்கு 3 ரூபாவைத் தந்தேன் என்றான். அதற்கு அப்பனோ, இல்லை இருவரும் சமமாக உண்டபடியால் ஆளுக்குப் பாதியாக நான்கு ரூபாய் எனக்கும், நான்கு ரூபாய் உனக்கும் சேரும் என்று கூறினான். இதனால் இருவருக்கும் வாக்குவாதம் முற்றியது. எமக்குள் பிரச்சினை வேண்டாம் வா நாம் அரசனிடம் சென்று கேட்போம் என்று முடிவு செய்தான் குப்பன்.

எனவே, இருவரும் அரசனிடம் சென்றார்கள். அரசன் அவர்களின் வழக்கை கேட்டறிந்தார்.

வாசகர்களே! அரசன் என்ன தீர்ப்பு வழங்கியிருப்பார்?

***குப்பனுக்கு ஏழு ரூபாவும் அப்பனுக்கு ஒரு ரூபாவும் என்று தீர்ப்பு வழங்கியிருப்பாரோ! என நம்பலாமா?***

**ஆக்கம்**

**வ.கலைச்செல்வி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகில்வண்ணன்

# பொழுது விடியும்...!

தொந்தி வயிற்றினன்! தோகை வாகனன்!
சொந்தமாக எனக்கு வந்து வாய்த்தனர்!
அந்த வகையில் அதிஷ்ட மானவன்
எந்த நேரமும் இ(ரு)வரைப் போற்றுவேன்!

வாழ்வில் உயர்ந்து வளமும் பெற்றிட
வாழ்த்திப் போற்ற மனிதர் இல்லையே!
போட்டி பொறாமை பொங்கி எழுவதும்
வெட்டி வீழ்த்த வேகங் கொள்வதும்,
'இன்பத் தமிழர்' வாழ்வில் இயற்கையாம்!
துன்பம் வந்தால் சிரிக்கச் சொல்லி
வள்ளுவர் தமிழில் வகையாய்ச் சொன்னார்!
எள்ளி நகையாடச் சொல்ல வில்லை!

அடுத்த வீட்டில் அடுப்புஎரிய வில்லையெனில்
கொடுத்துப் புசியாரே கொண்டாடி மகிழ்பவரும்
'விடுப்புப்' பார்த்து விகடமும் செய்வாரே!
எடுப்பான நடை எதற்கு என்றே...?

மூன்று வேளை முறையாய் உணவுண்டு
நன்றுவாழ நல்ல முயற்சி செய்தால்
கூடப் பிறந்தவர் கூடச் சகியாரே?
வாடப் பிறந்தவனார்? வாழப் பிறந்தவனார்?

துன்பம் என்னகூடப் பிறந்ததா?
துயரம் என்னதனிமனித சொத்தா?
இன்பம் என்பது ஏழைகட்கு இல்லையா?
இறைவன் விதித்த விதியும் மாறுமா?
அன்பு கொண்டவர் துன்பம் கொள்கிறார்
அதுவும் அற்றவர் ஆடி மகிழ்கிறார்
'சொந்தம்' என்பதை சுமையாய் வெறுக்கிறார்
சொந்தம் மறந்தவர் சுகமாய் வாழ்கிறார்!
பந்த பாசம் பணத்தால் மாறுது!
வந்த வழியும் மறந்து போகுது!
அண்ணன் தம்பி என்ன
அதுவும் கடையில் வாங்கும் சரக்கா?

அக்கா தங்கை உறவு கூட
அடையும் லாப-நட்டக் கணக்கில் உண்டு!
கணவன் வந்த கையோடே அன்பு
கனவாய்ப் போகும் உறவும் உண்டு!
அண்ணன் நமக்காய் செய்த தென்ன?
அவனின் வாழ்வு அழிந்த தெதனால்?
எண்ணிப் பார்க்க மறுக்கும் உள்ளம்
எவர்க்கும் இருக்க வேண்டாம் இறைவா!

'சோறு போட்டு வளர்த்தால் போதும்!
கூறு போட்டு வாழ்வோம் நாமே!
கொள்கை உடைய மனிதர் வாழ்வில்
கொள்ளை இன்பம் பெறுவார் போலும்!
ஆல்போல் தழைத்து வாழக் கண்ட
ஆசையும் அழிந்து மறைந்து போயிற்று!
தனிமரமாய் வாழ்ந்திடத் தள்ளப் பட்டேன்!
இனிவேறு வழியில்லை இதுவே முறையாகும்!

வாழ்ந்து பட்ட கஷ்டங்கள் - பிறர்
வாழப் பட்ட துன்பங்கள் - இனி
வாழ வழிகாட்டும் கைகாட்டிகள் - அவர்கள்
வாழ்வில் நீயே வழி காட்டி!

நாடு விட்டு வேறுநாடு சென்று
தேடி வந்த பணத்தைக் கொண்டு
வீடு கட்ட வேலை தொடங்க
ஓடிவந்து பார்க்கிறார், உள்ளம் நோகிறார்
கோடி கோடியாய் பணம் எங்கிருந்து
ஓடிவந்து பாயுது வெள்ளம் போல...?
கூடிக்கூடிப் பேசுறார், குணமும்மாறுவார்
கூடுவிட்டு கூடுபாயும் வித்தை கற்றவர்

இனியும் பார்த்து இருக்குமோ நெஞ்சம்?
சூனியம், சுடலைச் சாம்பல், வைத்தியர்
கூடவே இருக்கிறார்! பார்ப்போம் ஒருகை
கூட்டி வந்து வேலையும் தொடங்கிறார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளை செலவுக்கு 'நாலுபணம்' இல்லை!
வேளைக்கே கடன் வாங்கி வைத்தாச்சு
விழுந்தால் வைத்தியர் கூலி கொடுக்க,
முடிந்தால் விடுவாரா? முழுப் போத்தலும்
கோழியும் கொடுத்து, கூலியும் வேண்டுமே!
விழித்துச் செய்ததெல்லாம் வெற்றி என்பாரே?

குழி பறிப்பது தமக்குத் தாமென
பழி பாவம் செய்பவர் எண்ணுவதில்லை!
வழி பார்த்து சமயம் வரும்போது
வழித்தடம் தவறாது வந்து விழுவாரே!
அழுதாலும் தொழுதாலும் அப்போது பயனில்லை!
பொழுது எமக்காய் விடியும் ஒருநாள்!
தந்தை தரவில்லை! தாயும் உதவவில்லை!
வந்த மனைவியும் கொண்டு வரவில்லை!

சொந்தம் இருந்தும் சுகம் தரவில்லை!
எந்தன் முயற்சியில் உழைத்து முன்னேறி
வந்து நிமிர்ந்தேன் வாழ்வில் ஒருபடி!
நொந்து போனவர் வாழ்வில் உயரலாமா?
வெந்து போனது சிலரது மனது.!
கந்தனானவன் கனவில் சிரித்து நின்றனன்!

பதவி பெற்றனன் படித்து உயர்ந்தனன்!
உதவி பெற்றவர் ஊரில் நிறைந்தனர்!
காரும் சேர்ந்தது களிப்பும் மிகுந்தது!
பாரும் சிறக்க பலபதவி வந்தது!
சேவை செய்திட சிறப்பு வந்தது!
நாவை அடக்காது பகையும் வந்தது!
போட்டி வந்தது! பொறாமை வளர்ந்தது!
காட்டிக் கொடுத்திட கயவர் தோன்றினர்!

**நாடோடிக் கதைகள்**

# கமகமக்கும் புகையிலை

இப்பொழுதெல்லாம் புகைத்தல், புகையிலையை தடை செய்யுங்கள் என்ற கோஷம் எங்கும் வலுப்பெற்று வருகின்றன. இப்படியான தருணத்தில் புகையிலை பற்றிய சில நாடோடிக் கதைகள் என்ன சொல்கின்றன என அறிந்தால் ஆச்சரியமாகவும் அதே நேரத்தில் நகைச்சுவையாகவும் இருக்கும்.

ஒரு முறை உலகிலே கடும் பஞ்சம் ஏற்பட்ட போது கடவுள் ஒரு தேவதையை பூமிக்கு அனுப்பி வைத்தார். அவள் வலது கரம்பட்ட இடமெல்லாம் உருளைக்கிழங்கு விளைந்தது. இடது கரம் பட்ட இடத்தில் எல்லாம் மக்காச்சோளம் விளைந்தது. எல்லோரும் பசியாறுவதைக் கண்டு அவள் உட்கார்ந்து ஓய்வெடுத்தாள். அவள் எழுந்தபோது அவளது பின்பக்கம் பட்ட இடமெல்லாம் புகையிலை முளைத்தது என்று சிவப்பிந்தியர்களின் நாடோடிப் பாடல் ஒன்று உண்டு.

இன்னொரு கதையும் உண்டு. உலகில் இரண்டு பெரிய சாத்தான்கள் இருந்தன. ஒன்றோடு ஒன்றுக்கு கீரியும் பாம்பும்போல் என்றும் பகை.

ஒரு முறை குளிருக்குக் கொளுத்தி வைக்கப்பட்ட நெருப்புக்குப் பக்கத்தில் ஒரு சாத்தான் உறங்கிக்கொண்டிருந்தது. அந்த வேளை பார்த்து எதிரியான மறு சாத்தான் எரிந்து கொண்டிருந்த நெருப்பை உறங்கிக் கொண்டிருந்த சாத்தானின் தலைப் பக்கம் வைக்க, தீ பரவி அலறியடித்து எழுந்து சாத்தான் ஓடத் தொடங்கியது. அப்படி அது ஓடும்போது வழிநெடுக்க எரிந்து கொண்டிருந்த அதன் தலைமயிர் காற்றில் பறந்து விழுந்த இடங்களிலெல்லாம் புகையிலை முளைத்ததாம்.

(அதுதான் புகையிலை இப்படியெல்லாம் 'கமகமக்கின்றதோ - அதை பாவிப்பவர்களுக்குத் தான் வெளிச்சம்!

**நன்றி : மாலனின் - நேற்றின் நிழல்கள்**
**தகவல் : ஷெல்லிதாசன்**
**திருகோணமலை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழாக் காணும் மன்னவனார் மகேஸ்வரன்



யாழ்ப்பாணத்தின் வடபால் பெருமைகள் பல பெற்ற பெருவூர் சீர் இணுவைத் திருவூராகும். நீண்ட வரலாறும் பெருமையும் கொண்ட இக் கிராமத்து மக்கள் உயரிய பாரம்பரியங்களைக் கட்டிக் காத்து தமது தனித்துவத்தைப் பேணி வந்துள்ளார்கள். கிராமத்து வளங்களைச் சிறந்த முறையில் விருத்தி செய்து ஒழுக்கம் நிறைந்த வாழ்வை மேற்கொண்டு பிறந்த மண்ணுக்குப் பெருமை தேடித்தந்துள்ளனர். சிறந்த சமூக விழுமியங்களையும் செயற்பாடுகளையும் கைக்கொண்டனர். பழந்தமிழர் கலைகளைப் பேணிப் பாதுகாப்பதில் வாழையடி வாழையாகச் செயற்பட்டனர். தமிழையும் சைவத்தையும் இரு கண்களாகப் போற்றினர். தமது கிராமத்தின் வரலாறு, சமூக பொருளாதாரக் கட்டமைப்பு, கலை கலாசாரம் பண்பாடு போன்ற விடயங்களை அழியவிடாது பாதுகாத்து அடுத்த தலைமுறைக்குக் கையளிக்கும் வரலாற்றுக் கடமை மிக்கவராகவும் உள்ளனர்.

இத்தகைய பெருமை பெற்ற ஊரின் மைந்தனாக, வல்லிபுரம் - ஞானமணி தம்பதியினரின் மகனாகப் பிறந்த மகேஸ்வரன் ஆரம்ப கல்வியை இணுவில் சைவ மகாஜனா வித்தியாசாலையிலும், இடைநிலைக் கல்வியை யாழ்.இந்துக்கல்லூரியில் மேற்கொண்டு, பேராதனைப் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகி அங்கு கற்றுப் பட்டதாரியானார். அவரைப் பற்றி எழுத முற்படும் போது மூன்று துறைசார்ந்து நின்று நோக்கலாம் என எண்ணுகின்றேன். ஒன்று அவருடைய கல்விப் பின்புலம், இரண்டு பேராதனைப் பல்கலைக்கழகத்தில் அவரின் கல்விச் செயற்பாடுகளுடன் ஏனைய பல்கலைக்கழகங்களுடனான ஊடாட்டமும். மூன்று கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் செயல்களில் பங்களிப்பு. இவற்றின்பால் அவரின் தனித்துவத்தை உணர்ந்து கொள்ள முடியும்.

இணுவில் மண்ணுக்குப் பெருமைசேர்த்த கல்விமான்களில் ஒருவராக தமது இருப்பை நிலைநிறுத்திக்கொண்டவர். பட்டதாரியாக, ஆசிரியராக, விரிவுரையாளராக, கலாநிதியாக, பேராசிரியராக உயர்ந்து நின்கின்றார். படைப்புத்துறையிலும் பல நூல்களைத் தந்து நிற்கின்றார்.

பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியராக, தமிழ்த்துறைத் தலைவராக இருந்து தமிழ்மொழிக்கும் தமிழியல் ஆய்வுக்கும் தமது மேலான பங்களிப்பை வழங்கி வருகின்றார். கள ஆய்வுகள், கல்வெட்டு ஆய்வுகள் என்பவற்றை மேற்கொண்டு தமிழர்தம் தொன்மையை அவர்தம் கலாசாரம் பண்பாடுகளை நிலைநிறுத்தி பல ஆய்வுக் கட்டுரைகளை எழுதியுள்ளார். உலகமெங்கும் நடைபெறும் ஆய்வு மாநாடுகளில் பங்கேற்று தமது கட்டுரைகளைச் சமர்ப்பித்து பலரின் மதிப்பைப் பெற்றுள்ளார்.

மேலும் பல ஆய்வு நூல்களையும் வெளிக்கொணர்ந்துள்ளார். பல பேராசிரியர்களின் நன்மதிப்பைப் பெற்ற இவர் பழமையில் புதுமைகாணும் பல அரிய கருத்துக்களை முன்னிறுத்தி மடைமாற்றம் செய்து தெரிவிப்பதில் என்றும் பின்னிக்காத வல்லமை கொண்டவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


"கற்றாருள் கற்றார் எனப்படுவர் கற்றார்முன்
கற்ற செலச்சொல்லு வார்"

என்ற திருவள்ளுவரின் பொய்யாமொழிக்கு அமைவாக, சொல்ல வல்லவர் என்ற நிலையில் தனித்துவமானவராகத் திகழ்கின்றார்

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் நீண்டகால உறுப்பினராக இருந்துவரும் இவர் சங்கம் மேற்கொள்ளும் எல்லா வகையான செயற்பாடுகளுக்கும் உந்து சக்தியாக இருந்து பணியாற்றியுள்ளார். ஆட்சிக்குழு உறுப்பினராக நூலாகச் செயலாளராக, துணைத்தலைவராகப் பதவி வழி நின்று தமது ஆற்றல் மிக்க சேவையை அர்பணிப்புடன் வழங்கி வந்துள்ளார்.

மணிவிழாக் கண்டு முகிழ்ந்து நிற்கும் மதிப்புக்குரிய பேராசிரியர் வ.மகேஸ்வரன் அவர்கள் சீரும் சிறப்புடன் நீண்டுவாழ 'தாயக ஒலி' வாழ்த்தி மகிழ்கின்றது.

## தெய்வம் ஒரு மனிதனாக



'மக்கள் சேவையே மகேசன் சேவை' என அரசியலில் குதிப்பவர்களே இங்கு பலர். அதனால் காலப் போக்கில் அதையெல்லாம் மறந்து தங்கள் குடும்பத்தின் சேவையே குலதெய்வத்தின் சேவை என இவர்கள் தடம்புரண்டு விடுகின்றனர்.

எதிர்பார்ப்புக்கள் எதையும் புறந்தள்ளி, தமிழ்நாட்டில் ஒரு எம்.எல்.ஏ ஆக தெரிவாகி மிக மிக சாதாரணமாக தனது வாழ்க்கையை கொண்டு நடாத்தியவர் என்று கூறத்தகுந் தவர் வேறு யாராக இருக்கும். ஆம், இடது சாரி இயக்கத்தின் மிகப் பெரிய தலைவராகத் திகழ்ந்த மறைந்த தோழர் ப.ஜீவானந்தம் அவர்களைத் தவிர வேறு யாராகவும் இருக்க முடியாது?

தமிழ்நாடு - வண்ணாரப் பேட்டையில் ஆயிரக்கணக்கான குடிசைகளுக்கு நடுவில் ஒரு சிறிய குடிசையில் - அதுவும் ஒரு எம்.எல்.ஏ ஆனபிறகும் அவரின் வாழ்க்கை அங்கேயே தொடர்ந்தது.

அவர் வாழ்ந்த வீடு, அதாவது குடிசை மழை நாளில் எப்படி இருந்தது என்பதை அவரது மனைவி ஒருமுறை விபரித்திருந்தார். " வீடெல்லாம் ஓட்டை. சூரியனும், சந்திரனும் வருண பகவானும் எங்கள் வீட்டில் சுதந்திரமாக உட்புகுவார்கள். அப்படி ஒரு மழைநாள் இரவு முழுவதும் நான் தண்ணீரை எடுத்துக் கொட்ட, அவர் கூரையை சரிபடுத்திக் கொண்டு குந்தி இருந்ததும் உண்டு"


இப்படித் தனதும், தனது குடும்பத்தினரதும் சுகவாழ்வைத் துறந்து ஏழைகளோடு ஏழையாக வாழ்ந்த அந்த 'ஜீவா' ஒரு மனித தெய்வம் என்றால் மிகையாகாது.

- ஷெல்லிதாசனின் தகவல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓ.கே.குணநாதனுக்கு சர்வதேச இலக்கிய விருது



சுமார் 65 ஆயிரம் மாணவர்களையும் 2500 விரிவுரையாளர்களையும் மருத்துவத்துறை, பொறியியல்துறை, கலைத்துறை, மொழித்துறை எனப் பல்துறை கொண்டு இந்தியாவின் முதன்மைப் பல்கலைக்கழகமாகத் திகழும் எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழகம் தமிழ் மொழி, இலக்கிய, பண்பாட்டு மேன்மைகளைக் குறிக்கோளாகக் கொண்டு ஆண்டுதோறும் தமிழ் இலக்கியப் படைப்பாளிகள் 12 பேருக்கு தமிழ்ப்பேராய சர்வதேச இலக்கிய விருதினையும் சுமார் 50 இலட்சம் ரூபா பணப்பரிசிலையும் வழங்கி வருகிறது.

2016ம் ஆண்டுக்கான 5வது ஆண்டு விருது வழங்கும் நிகழ்வு 2017.02.18ந் திகதி சுமார் 4 ஆயிரம் எழுத்தாளர்கள், தமிழறிஞர்கள், மாணவர்கள் கலந்து கொண்ட எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழகத்தின் முனைவர் தி.பொ.கணேசன் அரங்கில் பல்கலைக்கழக வேந்தர் முனைவர் தா.இரா.பாரிவேந்தர் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வின் போது சொட்டுத்தண்ணீர் என்ற சிறந்த சிறுவர் நூலை எழுதிய டாக்டர் ஓ.கே.குணநாதன் சிறுவர் இலக்கியத்திற்கான தமிழ்ப்பேராய சர்வதேச குழந்தை இலக்கிய விருதும் 4 இலட்சம் ரூபா பணப்பரிசும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

எஸ்.ஆர்.எம்.பல்கலைக்கழகத்தினால் படைப்பிலக்கியத்துக்காக வழங்கப்படும் இவ் விருது இந்தியர் அல்லாத எழுத்தாளர் ஒருவர் பெறுவது இதுவே முதற் தடவையாகும்.

38 வருடங்களாக இலக்கியப்பணி ஆற்றி வரும் டாக்டர் ஓ.கே.குணநாதன் இது வரை சுமார் 40 குழந்தை இலக்கிய நூல்களை தமிழுக்குத் தந்துள்ளார். இவர் நவீனத்துவ குழந்தை இலக்கியத்தின் முன்னோடியாகத் திகழ்கின்றார். நவீனத்துவ கவிதை, நவீனத்துவ சிறுகதை, நவீனத்துவ நாவல், நவீனத்துவ நாடகங்கள் போன்றன பேசப்படுவது போல நவீனத்துவ சிறுவர் இலக்கியத்துறையில் ஆழக் கால் பதித்துள்ளமைக்கு இவரின் படைப்புக்கள் சான்று.

இந்தியாவில் இவருடைய குழந்தை இலக்கியப் படைப்புக்கள் பெரும் கவனத்திற்குள்ளாக்கப்பட்டுள்ளன.

இவர் எழுதிய குழந்தை இலக்கிய நூல்களுக்காக பல தடவைகள் இலங்கையிலும் வெளிநாடுகளிலும் விருதுகளை வென்றுள்ளார். சிறுவர் இலக்கியத்துக்காக இந்தியாவில் இவர் பெற்ற விருதுகளில் செம்பணிச் சிகரம் விருது, குழந்தை கவிஞர் அழ.வள்ளியப்பா வாழ்நாள் சாதனையாளர் விருது, திருப்பூர் விருது, தமிழ் நாடு கலை இலக்கியப் பெருவிருது, சின்னப்ப பாரதி அறக்கட்டளை விருது, திருப்பூர் தமிழ்ச் சங்க விருது போன்றவை குறிப்பிடத்தக்கவை.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Easan & CO

*Chartered Management Accountants*

## Specialists in arranging Commercial Loans

- Self Assessment Tax Return
- CIS Refunds
- Accounts & Book Keeping
- VAT Returns
- PAYE
- Management Accounting



S.Eswaranathan ACMA
(Easan)

196 Merton High Street
South Wimbledon
London SW19 1AX

Tel: 020 8543 8484
Fax : 020 8540 0107
Mobile : 07801227017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# HENSHOU ISSHINRYU KARATE ACADEMY

59 Cranley Road, Ilford, Essex, IG2 6AF

Tel: 020 8518 3288, Mob: 07950346432, Email: info@henshou.com, Web: www.henshou.com

AFFILIATED TO ISSHINRYU WORLD KARATE ASSOCIATION – OKINAWA, JAPAN AND ALL INDIA ISSHINRYU KARATE ASSOCIATION - INDIA





## DEVELOP YOUR SELF DEFENCE, SELF CONTROL SELF DISCIPLINE, COURAGE & LEADERSHIP


*Renshi Raveendran is a 6th Dan Black Belt who has trained directly under Master Shihan Hussaini(India), Grandmaster Christopher Chase (USA) and Grandmaster Kichiro Shimabuku(Japan)

*Trained and coached over 1000 students from various branches (Students age varies from 5yrs to 65 yrs-male and female).

*His Students have won many awards from various local competitions and world Isshinryu Karate competitions held in the USA



தமிழர்கள் செறிந்து வாழும் பல பகுதிகளில்
றென்ஷி ரவீந்திரனது நேரடிக் கண்காணிப்பில்
தகுதி வாய்ந்த ஆசிரியர் குழுவின் அனுசரணையுடன்
இஷின்றியு கராத்தே வகுப்புக்கள்
சிறந்த முறையில் பயிற்றுவிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது



**OUR BRANCHES:**

EASTHAM, MANOR PARK, NEWBURY PARK WALTHAMSTOW, PLUMSTEAD, LEWISHAM CROYDON, MITCHAM, BRISTOL, HARROW SOUTHEND, SWINDON

**CONTACT : RENSHI KANDIAH RAVEENDRAN** (6th DAN BLACK BELT)

**TEL : 020 8518 3288**

**MOB : 07950 346 432**

**Email : info@henshou.com Web : www.henshou.com**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டத்தரணிகளும் குடிவரவு ஆலோசகர்களும்

# Rasiah & Co
## Solicitors


- *Conveyancing*
- *Residential & Commercial*
- *Matrimonial*
- *Immigration*
- *Landlord & Tenants*

**Tel : 020 8543 4040**
**Fax : 020 8543 2400**

180A Merton High Street,
South Wimbledon,
London SW 19 1AY

DX: 300004 Wimbledon South

rasiahsolicitors@btconnect.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23 வருட கால அனுபவம்

# Linga & Co

## Legal Advisors & Immigration Specialists

## We Specialise in:

- Asylum and Immigration Matters
- Human Rights applications
- Appeals
- Detention and Bail
- Entry Clearance Application and Appeal
- Injunctions & Judicial Reviews through associate solicitors
- Work Permits
- EEA Application (Sponsor)
- Student Visa, Visitor's Visa
- Highly Skilled Migration Programme
- Naturalisation Applications

- Family Law
- Employment Law
- Criminal Law



**V.P.Lingajothy**
LLB(Hons), M.Sc., Dip Fms, ACILEX
Principal
immigration Specialist
E-mail: MRLINGA@AOL.COM

ஐரோப்பிய மனித உரிமைகள் சட்டம் சார்பாக தகுந்த ஆலோசனைகளை இப்போது நாங்கள் வழங்குகிறோம்.

நீங்கள் அல்லது உங்கள் உறவினர் இங்கிலாந்திற்கு 2007 ஆம் ஆண்டுக்கு முன்னர் வந்துள்ளார்களாயின் உடன் தொடர்பு கொள்ளவும்.

**மிகவும் நம்பிக்கையான வெற்றிகரமான நிறுவனம்**

General Line : 020 8544 9285

Fax : 020 8542 9530

46, High Street
Collierswood
London SW19 2BY

OISC

**Emergency Line : 07771 646 441**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இலங்கையில் 8 தடவைகள் குழந்தை இலக்கியத்திற்காக அரச சாகித்திய விருதுகளை யும் சான்றிதழ்களையும் பெற்ற பெருமை இவ ருக்கு உண்டு.

இவருடைய நூல்கள் பல ஆங்கிலம், சிங்களம், மலையாளம் ஆகிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பு அமிர்தகழியைச் சேர்ந்த இவர் இலங்கை இளைஞர் பாராளுமன்றத்தில் உதவிப்பணிப்பாளராக இருந்து ஓய்வு பெற்றவர். தற்பொழுது மதுரை காமராசர் பல்கலைக்கழகத் தின் இந்திய - இலங்கை ஒருங்கிணைப்பாளரா கப் பணிபுரிகின்றார்.

இவர் குழந்தை இலக்கியத்தினை முறையாகப் பயின்று எழுதுவது ஆரோக்கிய மான குழந்தை இலக்கியத்தின் அடையாளம். சாதனையாளரைத் 'தாயக ஒலி' யும் வாழ்த்தி மகிழ்கின்றது.

# உலகப் புகழ்பெற்ற இளம் தாரகை மலாலா



தலிபான்களின் தடையைமீறி பள்ளிக்கூடம் சென்ற பாக்கிஸ்தான் நாட்டைச் சேர்ந்த செல்வி மலாலா யூசாப் சாய் 2012ஆம் ஆண்டு சுடப்பட்டார். இங்கிலாந்தில் அடைக்கலம் கோரி தமது கல்வியை மேற்கொண்ட மலாலா இன்று உலகளவில் பேசப்படும் புகழ்பெற்ற தாரகையாக முகிழ்ந்து நிற்கின்றார்.

மலாலா அவர்கள் ஐக்கிய நாடுகள் சபை வரலாற்றில் முதன்முறையாக இளம் அமைதித் தூதுவராக நியமனம் பெற்றுள்ளார். சிறுமிகளின் கல்வி நடவடிக்கைகளில் சிறப்புக் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்னும் நோக்குடன் ஐக்கிய நாடுகள் சபையின் அமைதித் தூதராக, சிறுவர் உரிமை ஆர்வலரும், சமாதானத்திற்கான நோபெல் விருதை பெற்றவருமாகிய மலாலாவுக்கு ஐ.நா.வின் பொதுச் செயலாளரினால் 10.04.2017 அன்ற நியுயோர்க் ஐ.நா.தலைமையகத்தில் அமைதித்தூதுவர் நியமனம் வழங்கி வைக்கப்பெற்றது.

"மலாலா மிகவும் கடினமான இடங்களைப் பார்வையிட்டுள்ளதுடன் புலம்பெயர்ந்தோர் முகாம்களுக்கும் சென்றுள்ளார். மேலும் மலாலா அமைப்பு லெபனானின் பள்ளத்தாக்கில் பாடசாலையும் நடத்தி வருகின்றது" என்ற ஐ.நா.செயலாளர் நாயகம் கூட்டெரெஸ் அவர்கள் நியமனம் வழங்கும் நிகழ்வில் குறிப்பிட்டுக் கூறியுள்ளார்.

இதேவேளை கனடா அரசாங்கம் மலாலாவுக்கு சிறப்புக் குடியுரிமை வழங்கி அண்மையில் கௌரவித்துள்ளமையும் பெருமைதரும் விடயமாகும். இளம் வயதிலேயே உலகளவில் மதிக்கப்படும் ஒருவராக மலாலா இருப்பது உண்மையிலேயே போற்றுதலுக்குரியது. அவரின் மனிதாபிமான சேவை தொடர எமது வாழ்த்துக்கள்.

- அருந்தவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலைகளை நகர்த்தும் பேரன்பு

இங்கே
சொல்லவொணாத் துயரங்கள்
நம்பிக்கையை
பிய்த்துக் கிழித்து
நங்கூரம் இடுகிறது!
புலப்படாத
பொழுதுகளின்
கூர் நகங்களை கொஞ்சம்
கொய்து விடுங்களேன்!
பயங்களின்
பேரலைகளோடு
ரணங்களில் படுத்துறங்கும்
துடுப்புக்களை இழுத்துச் செல்லுங்கள்!
அந்த நுனிகளில்
தூக்கத்தைத் தொலைத்து
பூந்தோட்டப் பாதைகளை
புதை குழிகளாக்கியது போதும்!
ஒவ்வொரு இழப்பிலும்
நல்லூக்கக் கனவுகள்
நழுவி உடையும் போதெல்லாம்
சின்னச் சின்னதாய்
சொர்க்கம் செத்துப் போகிறது
வாழ்வை உயர்த்தும்
ஒரு பேரன்பு
அந்த மலைகளையே நகர்த்தும்!
பெரிய விருட்சங்களையே பெயர்க்கும்!

- தமிழ் உதயா

# பிறந்த நிலமே மறந்து விடுமா!!

புதிய வானம் புதிய பூமி
என்னை அழைக்கிறதே!
இளமைக் கோலம் வசந்த காலம்
கண்ணில் தெரிகிறதே!
மட்டக்களப்பே! மட்டக்களப்பே!
தேன்சிந்தும் பூமி நீதானே
பிறந்த நிலமே மறந்து விடுமா
எனை ஈன்ற சாமி நீதானே

ஆற்றங்கரையும் அசையும் இலையும்
என்னைச் சுகம் கேட்குதே
காற்று வெளியும் கடலின் ஒலியும்
என்னைக் கண்டு துள்ளுதே

ஒரு அன்னையைப் போல்
சிறு பிள்ளையைப் போல் - மண்ணில்
பாசம் உண்டாகுதே
ஒரு பறவையைப் போல்
இரு சிறகினுக்குள் - என்னில்
நேசம் கொண்டாடுதே

சொந்த மண்ணில் சோகம் நேர்ந்தால்
கைகள் கொடுத்திடுவோம்
வந்தோர் எல்லாம் வாழ வைத்த
சொர்க்கம் காத்திடுவோம்

சி.தணிகசீலன்
தேற்றாத்தீவு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிரவேலு மகாதேவா

# ஜெயகாந்தன் அவர்களுக்கு அஞ்சலி மலர்கள்

**ஜே.கே. என்று அழைக்கப்பட்ட ஜெயகாந்தன் அவர்களின் மறைவின் இரண்டாவது ஆண்டு நினைவு தினத்தையொட்டிய அஞ்சலி மலர்கள்.**



1934 ஏப்ரல் மாதம் கடலூரில் சாதாரண விவசாயக் குடும்பத்தில் அவதரித்து பார்போற்றும் எழுத்தாளராக படைப்பாளியாக மிளிர்ந்த ஜெயகாந்தன் அவர்கள் மறைவையொட்டி திரு.இராமகிருஷ்ணன் என்பவர் கூறுகையில் கண்ணீர் சிந்துவதற்குப் பதிலாக மேலாக ஒன்றைச் செய்ய வேண்டும் என்று தோன்றுகிறது. என்ன செய்வது என்று தெரியவில்லை என்று ஆதங்கப்பட்டார். மரணத்தைப் பற்றி அவர் அஞ்சியதே இல்லை. வயதானால் சாவு நிச்சயம். அது வரும் போது வரட்டும். இன்பம் பொன்னால் கிடைப்பது இல்லை. புகழால் கிடைப்பது இல்லை. பெண்ணோ பொருளோ தருவது இல்லை. தன்னைத் தானேஅறிந்து கொள்வது தான் இன்பம். தன்னை அறிந்தவன் தன்னை மறைத்துக் கொள்ளமாட்டான் என்பவை அவரது வரிகள்.

ஜெயகாந்தனின் துணைவியார் ஞானாம்பிக்கை ஒரு ஓய்வு பெற்ற ஆசிரியை. கௌசல்யா என்ற பெண் ஒரு தோழியாக அறிமுகமாகி பின்னர் அவர் வாழ்க்கையுடன் இணைந்தவர். மூத்த மனைவிக்கு பிறந்தவர்கள் மூவர். இளையவளுக்கு குழந்தைகள் கிடைக்கவில்லை. மகள் காதம்பரி அரச ஆசிரியையாகவிருக்கிறார். மகன் ஜெயசிம்மன் பத்திரிகைத்துறையில் தொழில் புரிகிறார். மூன்றாவதுபிள்ளை தீபலக்ஷ்மி மென்பொருள் துறையில் வேலை பார்க்கிறார். ஜே.கே எல்லா விடயங்கள் பற்றியும் சரளமாகப் பேசுவார். (Romantic Man). ஜெயகாந்தனின் பிள்ளைகளைக் கவனித்துக்கொள்வதுடன் நண்பர்களை கவனித்து கொள்வதற்கும் கௌசல்யா ஒத்தாசை புரிந்தார். அவர் ஒரு நாடக நடிகையும் கூட (Voice Artist) அவரினால் குடும்பத்திற்குள் எந்தப் பிரச்சினையும் ஏற்பட்டதில்லை.

'ஒரு மனிதன்', ஒரு வீடு, ஒரு உலகம் என்பது ஜே.கே. எழுதிய நாவல்களில் அற்புதமானது. ஹென்றி என்று அவர் படைத்த பாத்திரம் அபூர்வமானது. 'சில நேரங்களில் சில மனிதர்கள்', 'ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள்'. 'உன்னைப் போல் ஒருவன்' (தேசியவிருது), 'யாருக்காக அழுதான்' என்பவை அவரது கதைகள் சினிமாப்படமாக்கப்பட்டன. 'சிலநேரங்களில் சில மனிதர்கள்' சக்கைப் போடு போட்டது. நடிகை லக்ஷ்மிக்கு தேசிய விருது கிடைத்தது (1977) இளையராஜா கூறுகையில் தமிழ் இலக்கிய உலகத்தையும், தமிழ்ச் சமுதாயத்தையும் தனது பேச்சாலும் எழுத்தாலும் ஈர்த்து அதிர வைத்த மிகப் பெரிய கலைஞன் ஜெயகாந்தன் என்றார். புரட்சிக் கருத்துக்களை அதிரவைக்கும் குரலில் எவருக்கும் அஞ்சாமல் முழக்கிக் கொண்டிருந்தார். ஜே.கே.மேடைப் பேச்சில் சிங்கத்தின் கர்ஜனை. உதிரும் சொற்களில் நெருப்புக் கக்கும். சுதந்திரச் சிந்தனை கொண்டவர். அதிகாரத்திற்கு எதிராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவேசம் பொங்கும். வைரமுத்து திராவிடக் கருத்துக்கள் கொண்டவர். எதிரான கருத்துக்கள் கொண்ட ஜேகே யை எண்ணி மனத்திற்குள் வியப்படைந்தேன் என்றார். எமது நாட்டு எழுத்தாளர் மல்லிகை ஜீவா தமிழகம் விஜயம் செய்யும் போது ஜெயகாந்தனை சந்தித்துவிட்டுத் தான் நாடு திரும்புவார். எழுத்து பேச்சு செயல்பாடுகள் மூலம் தமிழ்ச் சமூகத்தின் மேம்பாட்டிற்காக உழைத்த பெருமகனின் இறுதி ஊர்வலத்தில் ஒரு நூறு பேர் வரையில் தான் கலந்து கொண்டிருந்தனர். ஒரு சமயம் அவர் கூறுகையில் "சாவு என்று ஒன்று இருக்கும் போது கடவுள், பாசம் என்ற ஒன்றை ஏன் உருவாக்கினான் என்பது. எமது சிந்தனையைத் தூண்டுகிறது." அவர் பெற்ற விருதுகளில் ஞானபீட விருது உயர்ந்தது.

**சிறுவர் கதை**

# ஆகா என்ன சுவை...

அது ஒரு அடர்ந்த காடு. காட்டுக்குள் விறகு வெட்டச் சென்றான் குமார். அங்கே பல மரங்களில் பாலைப்பழங்கள் காய்த்துத் தொங்கிக்கொண்டிருந்தன. ஆகா நல்ல பழுத்த பழங்களாக இருக்கின்றன இதனைக் கொண்டு சென்று மன்னனுக்கு கொடுத்தால் அவர் சந்தோஷமாக விரும்பிச் சாப்பிடுவார் என்று எண்ணி, குமார் மன்னனுக்கு ஒரு கூடையில் நிறையப் பழங்களை எடுத்துக் கொண்டு சென்றான். வாயிலில் உள்ள காவலாளியை அழைத்து இந்தப் பழங்களை மன்னனுக்காக எடுத்து வந்திக்கின்றேன், உள்ளே எடுத்துச் செல்ல அனுமதி அளிக்கவும் என்று குமார் கேட்டான். காவலாளி உள்ளே செல்ல அனுமதி அளிக்கவில்லை.

தானே அந்தப் பழங்களை மன்னனிடம் கொடுப்பதாகக் கூறி கூடையை வாங்கிக் கொண்டு குமாரை வெளியேற்றிய காவலாளி அந்தப் பழங் களை மன்னனுக்குக் கொடுத்து அனுப்பினான். மன்னன் பழத்தினைச் சுவைத்துச் சுவைத்து உண்டான். உடனே காவலாளியை அழைத்து வரும்படி அழைப்பாணை விடுத்தான்.

காவலாளி பயந்து பயந்து மன்னனிடம் சென்றான். யார் உன்னிடம் இந்தப் பழக் கூடையைத் தந்தது என்று கேட்டார் மன்னன். நான் பழக்கூடையை வாங்கி விட்டு அவனை அனுப்பி விட்டேன் என்று கூறினான் காவலாளி. மன்னன் காவலாளியைப் பார்த்து உடனே அவனை அழைத்துவரும்படி கூறினான்.



காவலாளி விரைவாக வீதி வழியாக ஓடினான். பழக்கூடையுடன் வந்தவனைக் கண்டான். அவனை அழைத்தபடி ஓடினான். காவலாளி தன்னைப் பிடிப்பதற்காக ஓடி வருவதாக நினைத்து குமாரும் ஓடத் தொடங்கினான்.

காவலாளி - மன்னன் உங்களை அழைத்து வரும்படி கட்டளை இட்டுள்ளார் என்று பெருங்குரலில் கத்தினான். காவலாளியின் குரல் கேட்டு குமார் ஓடுவதை நிறுத்தினான். காவலாளி குமாரை மன்னனிடம் அழைத்துச் சென்று நிறுத்தினான். தனக்காக இவ்வளவு இனிப்பான பழத்தினை எடுத்து கொண்டு வந்த குமாருக்கு மன்னன் பொற்காசுகளைப் பரிசாகக் கொடுத்தான்.

**ஹேமா ஹதீபன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் நாடக வரலாற்றில் புதிய திருப்புமுனை

## மக்கள் களரி அல்லது மக்களுக்கான அரங்கம்

1974 கொழும்பு லயனல் வென்ற் கலை அரங்க நிறுவனத்தில் பேராசிரியர் எதிரிவீர சரச்சந்திர, நாடகவியலாளர் தம்ம ஜாகொட, கலாநிதி சுனந்த மகேந்ர தமெல், பேராசிரியர் சுசரித்த கம்லத் போன்ற ஆசிரியர்களின் கீழ் நாடகக் கலையினை பயின்றார் பராக்கிரம நிரியெல்ல. 1975ஆம் ஆண்டில் கலாநிதி காமினி ஹத்தொடுவேகம அவர்களின் தலைமையில் இலங்கையில் அமைக்கப்பட்ட முதலாவது வீதி நாடகக் குழுவின் ஆரம்பம் தொட்டு அதன் சிரேஷ்ட உறுப்பினராக இருந்து தனது நாடகப்பணயத்தை மேற்கொண்டார். அதேவேளை, 1976ஆம் ஆண்டு அவர் தனது முதலாவது நாடகத்தயாரிப்பை மேற்கொண்டார். "செக்குவ" அவரின் முதல் நாடகப்படைப்பு. இந்த நாடகம் அவ்வாண்டில் நடந்த அரச நாடகவிழாவில் சிறந்த நாடகப்பிரதிக்கான விருதினையும் இன்னும் பல விருதுகளையும் பெற்றுக் கொண்டது. அன்று தொட்டு நாடகம், திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி என்று அனைத்து ஊடகங்களிலும் அவர் தனது ஆளுமைகளை வியாபித்தார். இவற்றில் பெற்ற அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு 1999ஆம் ஆண்டு நகரும் நாடக அரங்குக்கான செயற்றிட்டத்தை இலங்கைக் கலாசார அமைச்சுக்கும், திணைக்களத்திற்கும், இலங்கை கலைக்கழகத்திற்கும் நாடகக்குழுவுக்கும் சமர்ப்பித்தார். எனினும், அரச நிறுவனங்களில் ஏற்பட்ட சிற்சில முரண்பாடுகளால் அச்செயற்றிட்டம் கைகூடவில்லை. மனம் தளராது அதனை ஒரு திடசங்கற்பமாகக் கொண்டு அவர் தொடர்ந்தும் செயற்பட்டதன் விளைவாக 2003 ஆம் ஆண்டு மக்கள்களரி நாடகம் மற்றும் அரங்க நிறுவனத்தை நிறுவ முடிந்தது. 14 வருடங்களாக மக்கள்களரி இலங்கையின் நாடகக்கலைக்கு அளப்பரிய பணியினை ஆற்றிவந்துள்ளது.

இலங்கையில் இனமுறுகல் ஏற்பட்டிருந்த காலத்தில் மீண்டும் இனங்களுக்கிடையில் சகவாழ்வை தூண்டுவதற்கான சிறந்த நிதர்சனமாக 2004 ஆம் ஆண்டு தொடக்கம் 12 வருடங்களாக இயங்கி வரும் பல்லின நாடகக்குழுவான மக்கள்களரியால் பல நல்ல பெறுபேறுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. நகர்புறத்திலிருந்து கிராமபுறம் வரையும் இலங்கையின் நாடகக்கலையில் புதியதொரு அத்தியாயத்தை உருவாக்கியுள்ளது. காத்திரமான நாடக படைப்புக்களை படச்சட்ட மேடையினையும் கடந்து மக்கள் களரி அரங்கான "நிவ் அரினா" அரங்கத்திலும் திறந்த வெளிகளிலும் இலட்சகணக்கான மக்கள் பார்வையிட்டுள்ளார்கள். எமது நாட்டுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட முதலாவது நகரும் அரங்கு இதுவாகும்.

முதற்தடவையாக அறிமுகப்படுத்தப்பட்ட முழுநேர பல்லின நாடகக்குழுவால் உருவாக்கப்பட்ட நாடகங்கள் தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் அரங்கேற்றப்படுவதால் இலங்கையில் எந்த ஒரு இடத்திலும் எந்த ஒரு சன சமூகத்திற்கும் நாடகத்தினை இரசிக்க கூடியதாயும் நாடகக்கலைப் பற்றிய அறிவினை வழங்கக்கூடியதாயும் உள்ளது. இன, மத, பேதங்களைக் கடந்து யாவரும் சமமாக கூடியிருப்பதற்கான களத்தை மக்கள்களரி உருவாக்கியுள்ளது.

ஆற்றுகை கலை (Performance Theatre) பிரயோக கலை (Applied Theatre) இவை இரண்டையும் பயன்படுத்தி விளிம்பு நிலை மக்களை பலப்படுத்தும் மக்கள்களரி, போரினால் பாதிக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்ட சிறார்களின் உள விருத்திக்கான பணியையும் செய்து வருகின்றது. பிரதேசமொன்றில் 2-3 மாதங்கள் தங்கியிருந்து நாடகக்கலையின் மேம்பாட்டிற்காக பாடுபடும் அதேவேளை மக்கள்களரியின் உட்கிடக்கையான, முக்கியத்துவமான சமூக ஒருமைப்பாட்டிற்கும், சமூக நல்லிணக்கத்திற்கும் அயராது உழைக்கிறது. சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் பிரதேசங்களில் பாடசாலை மாணவர்களுக்காக களப் பயிற்சிகளையும் செய்து வருகின்றது. பாடசாலை மாணவர்களுக்காக அரங்காற்றுகைகள், நாடக்கலை பற்றியதான இரசனை பயிற்சிப்பட்டறை மற்றும் ஆசிரியர்களுக்கான நாடகமும் அரங்கியலுமான பயிற்சிப் பட்டறைகள் என்பவற்றை விசேடமாக செய்துவருகின்றது. அதற்கிணங்க இதுவரை அநுராதபுரம் (இரண்டு தடவைகள்), பொலன்னறுவை, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, புத்தளம் (இரண்டு தடவைகள்), அம்பாந்தோட்டை, தங்காலை, மொனராகலை, யாழ்ப்பாணம் (இரண்டு தடவைகள்), ஹோமாகம, வவுனியா, மன்னார், தம்புத்தேகம, காலி, பதுளை (இரண்டு தடவைகள்), முல்லைத்தீவு மற்றும் சிலாபம் போன்ற பிரதேசங்களில் மக்கள்களரி நாடகம் சார் செயற்றிட்டங்களிலும் ஈடுபட்டு வந்துள்ளது.

நடிப்பு மற்றும் நாடகத் தயாரிப்பு பற்றி இளைஞர்களுக்கு கற்றுக்கொடுத்து அவர்களை பயிற்றுவிப்பது மக்கள்களரியின் பிரதான கடைமையாகும். அம்பாந்தோட்டை, நுவரெலியா, அநுராதபுரம் மற்றும் யாழ்ப்பாணம் போன்ற நான்கு மாவட்டங்களில் இளைய தலைமுறை நாடகக்குழுவினை மக்கள்களரி பயிற்றுவித்துள்ளது. அவர்கள் தங்கள் பிரதேசங்களில் நாடகச்செயற்பாட்டில் ஈடுபடுகிறார்கள். தேர்ச்சி மிக்க நாடகவாக்குனர்கள் மக்கள்களரி குழுவுக்குள்ளேயே இருப்பது இதற்குத் தகுந்த உதாரணமாகும். அவர்களில் பெரும்பாலானோர் நடிப்பு, இயக்கம், ஒப்பனை மற்றும் ஒளியமைப்பு போன்ற துறைகளில் தங்கள் திறமைகளை வெளிக்காட்டி அரச நாடகவிழாக்களிலும் மற்றும் இளைஞர் மன்ற விழாக்களிலும் அதி உயர்ந்த விருதுகளை வென்றிருக்கிறார்கள்.

இவ்வேளையில், சர்வதேச ரீதியாக மக்கள்களரி பெற்றுள்ள அங்கீகாரங்கள் பற்றி நினைவூட்டுவது நன்றாகும். இந்தியாவில் புதுடில்லியில் வருடந்தோறும் நடைபெறும் சர்வதேச நாடகவிழாவுக்கு 2008 மற்றும் 2012 ஆகிய இவ்விரண்டு வருடங்களிலும் மக்கள்களரியின் நாடகங்களான "சரண்தாஸ்" மற்றும் "பயணிகள்" நாடகங்கள் அரங்கேற்றப்பட்டுள்ளன. மக்கள்களரியின் நகரும் அரங்கினை கப்பல் மூலமாக எடுத்துச்சென்று கேரள சர்வதேச நாடகவிழா நடைபெற்ற வளாகத்தில் அரங்கு நிர்மாணிக்கப்பட்டு "ஹுணுவட்டய" நாடகம் காண்பிக்கப்பட்டது. நகரும் அரங்கு அவ்விழாவில் இன்னும் பல நாடக அரங்கேற்றங்களுக்காகவும் இசை நிகழ்ச்சிகளுக்காகவும் பயன்படுத்தப்பட்டது. 2015 ஆம் ஆண்டு கல்கத்தாவில் 4ஆவது களிந்தி ப்றெட்டயாஜோன் நாடக விழாவிலும் அதே ஆண்டு நவம்பர் மாதம் கல்கத்தா நகரில் 14 ஆவது நித்விக் சர்வதேச நாடகவிழாவிலும் "பயணிகள்" மற்றும் "போரிசாதயா" போன்ற நாடகங்கள் அரங்கேற்றப்பட்டன. இந்தியாவின் தமிழ்நாடு சென்னை சந்திரலேகா நடனாலயம், பாண்டிச்சேரி பல்கலைக்கழகம் மற்றும் புரிசை தம்பிரான் தெருக்கூத்து மன்றம் ஆகிய இடங்களில் "சரண்தாஸ்" நாடகம் அரங்கேற்றப்பட்டது. ஆசிய கலாசார பரிமாறல்கள் என்ற செயற்றிட்டத்தின் கீழ் மத்திய ஆசியாவின் கிரிகிஸ்தான் சன்கா நாடக நிறுவகத்தில் "பயணிகள்" நாடகமும் "மன்மதனை உயிர் எழுப்புதல்" கலாசார நிகழ்த்துகையும் நடாத்தக் கிடைத்தமை மக்கள்களரி பெற்ற பெரு வெற்றியாகும்.

2009 ஆம் ஆண்டு "ப்ரீடம் டு கிரியட்" நிறுவனம் நடாத்திய சர்வதேச போட்டியில் ஆசிய பசுபிக் வலயத்தில் சிறந்த 10 கலாசார குழுவில் ஒன்றாக மக்கள்களரி தெரிந்தெடுக்கப்பட்டது. மக்கள்களரி நீண்ட காலம் ஆற்றி வரும் பணிகளைப் பாராட்டி 2013ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் கல்வி, விஞ்ஞானம் மற்றும் கலாசார மேம்பாட்டிற்கான நிறுவனத்தின் (UNESCO) ஒரு பிரிவான சர்வதேச நாடக நிறுவனத்தினது (ITI) இணை உறுப்புரிமை (Coporating Membership) மக்கள்களரிக்கு கிடைத்தது. இச் சர்வதேச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடக நிறுவனத்தின் “சர்வதேச சமூக மாற்றத்திற்கான வலையமைப்பின்” (International Network of Theatre For Social Change) செயலகமாக மக்கள் களரி 2015 ஆம்ஆண்டு தெரிவானது.

2003 ஆம் ஆண்டு மக்கள்களரி நாடக நிறுனம் ஆரம்பிக்கப்பட்டு பல்லின நாடகக் குழு பயிற்றுவிக்கப்பட்டதன் பின் நாடகங்கள் சிலவற்றை தயாரித்து அதன் முதலாவது நகரும் அரங்கின் நாடகவிழா கொழும்பு நொமென்ட்ஸ் (தற்போது நெளும்பொக்குண அமைந்துள்ள இடம்) மைதானத்தில் அமைக்கப்பட்டிருந்த மக்கள்களரியின் நகரும் அரங்கில் நடாத்தப்பட்டது. அதன் பின் நாடெங்கும் நாடக விழாக்களை நடாத்திய மக்கள்களரியினர் மீண்டும், கொழும்பில் நாடக விழாவினை 2016நவம்பர் மாதம் 07ஆம் திகதி தொடக்கம் கொழும்பு பல்கலைக்கழகக் கோள்மண்டலத்துக்கு அருகாமையில் காணப்படும் மைதானத்தில் அமைக்கப்பட்ட மக்கள்களரியின் நகரும் அரங்கில் நாடக விழாக்களில் விருதுகள் வென்ற மக்கள்களரியின் நாடகங்களும், அழைக்கப்பட்ட நாடகங்களும் 21ஆம் திகதி வரை அரங்கேற்றப்பட்டன. நேபாளம், காட்மண்ட் நகரின் மண்டல நாடகக் குழுவினர் “பொக்ஸிக்கோ சர்” (Witch's House) நாடகம், பராக்கிரம நிரியெல்ல மற்றும் கே.ரதிதரன் ஆகியோர் இணைந்து இயக்கிய கலாநிதி குழந்தை.ம.சண்முகலிங்கம் அவர்கள் மொழிபெயர்த்த “வெண்கட்டி வட்டம்” நாடகம், பேராசிரியர் எஸ்.மௌனகுரு அவர்களின் “இராவணேசன்” நாடகம் என்பன இந்நாடக விழாவில் இடம்பெற்றிருந்தமை விசேட அம்சமாகும்.

**- மக்கள்களரி நாடக நிறுவனம்**
**இலங்கை**

## கௌரவிப்பு

யாழ்ப்பாணம், தம்பாலை அச்சுவேலையைப் பிறப்பிடமாகவும், நீர்கொழும்பை வசிப்பிடமாகக் கொண்டவரும், நீர்கொழும்பு, கொழும்பு போன்ற இடங்களில் சமூகசேவையினைச் சிறப்பாகச் செய்து வருகின்ற ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி கொழும்பு தந்தை செல்வா நற்பணிமன்றம் விவேகானந்தசபை மண்டபத்தில் 30.04.2017 அன்று சமூக சேவைக்காகப் பாராட்டி கௌரவம் செய்துள்ளது. இவர் கொழும்புத் தமிழ்சங்கத்தில் கடந்த 30 வருடங்களாக முழு நேரச் சமூக சேவை யினைச் செய்து வருவதுடன் தற்போது பொதுச் செயலாளராகவும் பணி செய்து வருகிறார். எற்கனவே கொழும்புப் பொதுநல நற்பணி மன்றத்தால் சமூகஜோதிப் பட்டமும், மேல் மாகாண கலாசார அமைச்சினால் சாகித்ய விருதும், 60வது பிறந்த தின நிகழ்வில் பேராசிரியர் சபா ஜெயராசாவினால் சமூக செம்மல் பட்டமும், கொழும்பு தந்தை செல்வா நற்பணி மன்றத்தால் பொற்பணி செம்மல் விருதும் உட்பட பல விருதகளைப் பெற்றுள்ளார்.



தேசிய கலந்துரையாடலுக்கான அமைச்சர் கௌரவ மனோகணேசன் அவர்கள் கௌரவத்தை வழங்குவதையும், யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தாத்தன், மேல் மாகாண உறுப்பினர் கே.ரி.குருசாமி, பேராசிரியர் சோ.சந்திரசேகரம் ஆகியோர் அருகில் நிற்பதனையும் படத்தில் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் துஸ்பிரயோகம்

**பல்லவி**

எல்லோரும் உணர்ந்து கொண்டால் துன்பமில்லை - சிறுவர்
நல்லாக வாழ்ந்தாலே இன்பம் கொள்ளை

(எல்லோரும் உணர்ந்து கொண்டால்...)

**சரணங்கள்**

1. அடிக்காதீர் ஏசாதீர் அவமதியாதீர் - பிள்ளைகள்
படிக்காத காரணமாய் பள்ளிகளிலே
தெருவோரம் பிச்சைக்கே திரியவிடாதீர் - பிள்ளைகள்
பருவத்தே பள்ளியிலே பயிலட்டுமே.

2. முதலாளியே உங்கள் முயற்சிக்காய் - சிறுவரை
தொழிலாளியாக்காதீர் தொந்தரவு செய்யாதீர்
சிறுவரே செல்வமாம் சிறப்பாம் குடும்பங்களிலோ
பெறுமவற்றுள் அதுவே பெரும் பேறாம்

(எல்லோரும் உணர்ந்து கொண்டால்...)

3. பீடிசுற்ற சுருட்டுச் சுற்ற - மீன்
வாடியிலே கருவாடு காயவிட
களவெடுக்கப் பொய் சொல்ல கன்னமிட
பழக்காதீர் பாலகரை பாவம் பிஞ்சகளே

4. போதைப் பொருள் விற்க பீடிசிகரற் குடிக்க
மதுவுக்கு அடிமையாக்கி மாமா வேலை பார்த்து - உங்கள்
புதுக் காதலிக்குத் தூதனுப்பி பாழடிக்காதீர்
பேதைப் பிள்ளைகளை பெரும்பாவம் சேருமே

(எல்லோரும் உணர்ந்து கொண்டால்...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. வெடிகள் செய்ய தீப்பெட்டிகள் செய்ய - சின்னப்
பெடியங்களைப் பழக்காதீர் பேரம் பேசி
கொள்ளையடிக்கவும் கொலைகள் செய்யவும் - சிறு
பிள்ளைகளைத் தூண்டாதீர் பேராசையாலே

6. பஞ்சமா பாதங்களில் பிஞ்சுக் குழந்தைகளை
அஞ்சாமல் ஈடுபடுத்தி அவர்கள் மனம்
பிஞ்சிலே பழுத்து பேதலிக்க வைக்காதீர்
நெஞ்சிலே ஈரமில்லாத நேசமில்லா மனிதர்களே.

(எல்லோரும் உணர்ந்து கொண்டால்...)

7. வீட்டு வேலைக்கமர்த்தி சிறுவர் வாழ்வுக்கு
வேட்டு வைக்காதீர் அவர்கள் தம்
பாட்டிலே படித்து முன்னேறி நம்
நாட்டுக்கே நல்ல தலைவர்களா கட்டுமே.

8. அன்பினால் அணைக்கும் அனிச்ச மலர்களையே - கெட்ட
ஆசையினால் அணைத்து அசிங்கப்படுத்தாதீர்
வேலியில்லா பயிர் அல்ல சிறுவர் - அவர்களைப்
பாலியல் துஸ்பிரயோகம் செய்து பாழடிக்காதீர்

(எல்லோரும் உணர்ந்து கொண்டால்...)

9. நேசியுங்கள் சிறுவர்களை நிறைந்த பாசத்தாலே
ஆசி உங்கள் அகங்களிலே ஊறட்டுமே
பாசிபடிந்த மனங்களின் மாசு விலகட்டுமே
யோசியுங்கள் சிறுவர் வாழ்வு வாசியாகட்டுமே

10. சிறுவருக்கும் உரிமையுண்டு சீராய் வாழ
சிறுவர்களே பெரியவர்களாம் சிலநாள் சென்றால்
ஒருவருக்கும் பகையில்லை ஒன்றுபடுவோம் இனிமேல்
எவரையுமே சிறுவர் துஸ்பிரயோகம் செய்யவிடோம்

(எல்லோரும் உணர்ந்து கொண்டால்...)



**நா.தியாகராசா**
**திருநாவற்குளம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செவ்வியல் ஆடல்

வாழையடி வாழையாக வளர்ந்து செவ்விய வடிவங்களை எய்திய நிலையில், வரலாற்றுக் காரணிகளால் நலிவுற்றிருந்த கலைவடிவங்களை மீட்டுருவாக்கம் செய்யும் பண்பாட்டு நடவடிக்கைகள் இந்திய விடுதலைப் போராட்ட காலத்தில் முன்னெடுக்கப்படலாயின.அந்த வகையில் மீட்டெடுக்கப்பட்ட தமிழகத்து செவ்வியல் ஆடலே பரதநாட்டியம். தேவராட்டம், சதிராட்டம், சின்னமேளம், கோயிலாட்டம், செவ்வழிக்கூத்து, திருச்சதிர், கடவுளாட்டம், சிவனாட்டம், சுமங்கலிக்கூத்து, சொக்கர்கூத்து என்ற பல்வேறு பெயர்களால் கிராமப்புறங்களில் அழைக்கப்பட்டு வந்தது. தேவரடியார்கள் என்ற பெண்களே அந்த ஆடலைப் பாதுகாத்து வளர்த்து வந்தனர்.

இறை சார்ந்த ஆடலாகத் திருச்சதிர் வளர்க்கப்பட்டிருந்தமையால் வரன்முறையான பயிற்சிக்குப் பின்னரே ஆடல் நிகழ்த்தப்பட வேண்டும் என்ற வற்புறுத்தல் நிலை இடம்பெற்றிருந்தது. செவ்வியல் இசை, நாட்டார் இசை, தாளக்கட்டமைப்புக்கள், செட்டு என்று குறிப்பிடப்பட்ட ஆடல் அசைவுகள், முகக்குறி என்று சொல்லப்பட்ட பாவங்கள்,செதுக்கல் என்று சுட்டும் கைமுத்திரைகள், கருவி இசை முதலியவற்றை மூத்த தேவரடியாரிடமிருந்து வரன்முறையாகக் கற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. இவ்வாறான கல்வித்தேட்டம் அவர்களது கலை ஆளுமைக்கு பலம் சேர்த்தது.

செவ்வியல் ஆடலாகிய இன்றைய பரதநாட்டியம் சிதைவுறாது பாதுகாக்கப்பட்டு வந்தமைக்கு தேவரடியாரிடத்துக் காணப்பட்ட அவ்வாறான வரன்முறையான ஆடற்கல்வியே அடித்தளமிட்டுள்ளது. சமூக முரண்பாடுகளை அடியொற்றி அவர்களின் வாழ்க்கைக் கோலங்களும் பல பரிமாணங்களை எதிர்கொள்ள வேண்டிய நிலையில் இருந்தமையைக் குறிப்பிட்டே ஆக வேண்டும்.

சிலப்பதிகாரம் தந்த இளங்கோவடிகள் தமது காப்பியத்தில் தேவதாசிகள் பரம்பரையில் தோன்றிய மாதவியைக் குறிப்பிட்டு அவளது ஆடற்கலையின் சிறப்பை முன்னிலைப்படுத்தியுள்ளார். அது இலக்கியம் என்ற வகையில் பெருமைபெறுகிறது.

அடக்கப்பட்டு ஒடுக்கப்பட்டிருந்த தேவரடியார்கள் தங்களுக்காக குரலெழுப்ப முடியாத நிலைக்கு உட்பட்டிருந்தனர். அவர்களுக்காக யாரும் குரலெழுப்ப முடியாத நிலையும் காணப்பட்டது. இவற்றின் பின்புலத்தில் பெரியாரால் முன்னெடுக்கப்பட்ட சுயமரியாதை இயக்கத்துடன் இணைந்து தீவிரமாகச் செயற்பட்ட மூவலூர் ஆ.இராமாமிர்தம்அவர்கள் தேவதாசி ஒழிப்பு நடவடிக்கைகளைத் தீவிரமாக முன்னெடுத்தார். தேவரடியாரின் துன்பமும் அவலமும் நிறைந்த வாழ்க்கையை மாற்றியமைக்கும் வினைப்பாட்டாளராக எழுச்சி கொண்டார். மேட்டுக்குடியினர் இதற்கு எதிராக வீறுகொண்டனர்.

இருந்தும் தேவரடியார் ஆலயங்களில் ஆடல்புரிவதை எதிர்த்துப் போராடியவர்களுள் கலாநிதி முத்துலட்சுமி ரெட்டி அம்மையாரின் பங்கு அளப்பரியது. தேவதாசிகள் ஆலயங்களில் நடனமாடுதல் சட்டபூர்வமாக ஒழிக்கப்பட்ட நிலையில் அவர்களால் முன்னெடுக்கப்பட்டு வந்த செவ்வியல் ஆடலைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறிதொரு வடிவிலே முன்னெடுக்க வேண்டிய தேவை தமிழகத்தில் எழுந்தது. தேவதாசி முறை ஒழிப்பும், தமிழரின் செவ்வியல் நடனத்தின் புத்துருவாக்கமும் ஒன்றையொன்று தழுவிய நிகழ்ச்சிகளாகும்.

வழுவூர் இராமையாபிள்ளை, மற்றும் கிருஸ்ண ஐயர் ஆகியோர் தமிழர் செவ்வியல் ஆடலின் புத்துருவாக்கத்திலே பெரும்பங்குகொண்டு உழைத்தனர்.

கர்நாடக சங்கீத ஆற்றுகையைப் புனிதமாகக் கொண்டோர் மத்தியில் பரதநாட்டிய ஆற்றுகை நிகழ்த்தப்பட்டமை அதன் மீட்டுருவாக்கத்துக்குக் கிடைத்த அங்கீகாரமாயிற்று. அதன் பின்னணியிலேதான் ருக்மணிதேவி அம்மையாரின் செயற்பாடுகள் எழுகோலம் கொண்டன. நாட்டியத்தை நிறுவனப்படுத்தி அவர் உருவாக்கிய 'கலாஷேத்திரம்' கல்வி நிறுவன ஆக்கத்தின் வழியான எழுச்சிக்கும் பரவலுக்கும் வழிவகுத்தது. அதன் தொடர்ச்சியும் வளர்ச்சியுமாக எழுகுழாத்தினரிடத்து ஆவலும் அங்கீகாரமும்பெற்ற ஆடல்வடிவமாகப் பரதநாட்டியம் எழுச்சிகொண்டு வருகின்றது.

இந்திய மண்ணிலிருந்து பரதநாட்டியத்தை இலங்கையில் காலூன்ற வைத்த பெருமை இணுவில் ஏரம்புநாதர் சுப்பையாவைச் சாரும். அவர் தமிழகத்தில் பரதநாட்டியக் கலையை வரன்முறையாகக் கற்று நாடுதிரும்பிய வேளை அக்கலையை இலங்கையர்கள் குறிப்பாக யாழ்ப்பாணத்தவர்கள் சின்னமேளம்,தேவடியாள் ஆட்டம் என்று ஒருவித தரக்குறைவாக எண்ணினர். அந்த எண்ணப்போக்கை உடைத்து அதன் புனிதத்துடன் மேடையேற்றி அதை வாழவைத்தவர் ஏரம்புநாதர் சுப்பையா என்றால் மிகையாகாது. அவரைத் தொடர்ந்து பலர் பரதநாட்டியக் கலையை இலங்கையின் பல பாகங்களிலும் பயிற்றுவித்தனர். அந்த வரிசையில் முக்கியமானவர் இணுவில் வீரமணி ஐயர். அவர் பரதநாட்டியத்தைப் பயிற்றுவித்ததுமல்லாமல் பல நாட்டிய நாடகங்களை எழுதி நெறியாள்கை செய்து மேடையேற்றியுள்ளார். இன்று இலங்கைத் தமிழர்கள் புலம்பெயர்ந்து சென்ற நாடுகளிலும் பரதநாட்டியக் கலையை மிகுந்த உற்சாகத்துடன் வளர்த்து வருகின்றார்கள்.


## பவளவிழா கொண்டாடும் தமிழ்சங்கத்தை வாழ்த்தி ஆதரவு நல்குவோம்

கொழும்புத் தமிழ் சங்கம் தனது 75வது ஆண்டில் காலடி எடுத்து வைத்து பவளவிழாவைச் சிறப்பாகக் கொண்டாட இருப்பது தமிழ் பேசும் மக்கள் அனைவர்களுக்கும் மகிழ்ச்சிதரும் செய்தியாகும். பவளவிழா ஆண்டில் கட்டட நிர்மாணப் பணியையும் முன்னெடுக்கவுள்ளார்கள். அந்தக் கைங்கரியத்தை நிறைவேற்ற எம்மவர்கள் மற்றும் புலம்பெயர்ந்து வாழும் உறவுகள் தம்மாலான ஆதரவினை நல்க வேண்டும் என்றும், உலகம் எங்கும் பரந்து வாழும் 'தாயக ஒலி' வாசகப் பெருமக்கள் கைகொடுக்க வேண்டும் என்றும் வேண்டுகின்றோம்.

**தொடர்பு : கொழும்புத் தமிழ்ச் சங்கம்**
**7, சங்கம் ஒழுங்கை, கொழும்பு - 06, இலங்கை**
**தொலைபேசி : 0112363759, 0112058220**

**- இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகம்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி.தி.விஜயரத்தினம்

# சிந்தையைக் கிளறும் சித்தர் பாடல்கள்

சித்தர்கள் என்போர் ஜீவன் முக்தர்கள். தமது ஆத்மசாதனைகள் மூலம் பல அரும்பெரும் சித்திகள் பெற்று வீடுபெற்றவர்கள். மறைந்தும் சூட்சும உருவில் மக்கள் மத்தியில் உலா வருபவர்கள். அவர்கள் பாடல்களில் ஆழ்ந்த ஆன்ம ஞானம் மட்டுமன்றி ஆழ்ந்த விஞ்ஞானமும் அடங்கியுள்ளன. உடலியல் (Physiology) பற்றி பல விடயங்களை இவர்கள் பாடல்களிலிருந்து அறியலாம்.

இவர்கள் அட்டமா சித்தி எய்தியவர்கள். அவையாவன : அணுவைப் போல சிறிதாகல், (அணிமா) மேருவைப் போல பெரிதாகுதல் (மகிமா), காற்றுப்போல இலேசாதல் (இலகுமா), பொன்போலப் பளுவாதல் (கரிமா), எல்லாவற்றையும்ஆளுதல் (பிராப்தி), வசப்படுத்தல் (வசித்துவம்), கூடுவிட்டுக் கூடுபாயுதல் (பிராகாமியம்), விரும்புவதை எல்லாம் செய்து முடித்து அனுபவித்தல் (ஈசத்துவம்), ஆகியனவாம்.

இவர்கள் வாசி என்ற மூச்சினை அடக்கி, ஆண்டு, யோக சக்தியினால் உடலில் உள்ள யாவற்றிலும் மனத்தை முறையாக நாட்டிக் குண்டலினியை எழுப்பி பலப்பல அனுபவமும் வெற்றியும் கண்டு அப்பால் உள்ள எல்லாம் ஆனபொருளில் நிலைத்தும் முக்தி பெற்றவர் ஆவர்.

இவர்கள் யோகப் பயிற்சியையும் மருத்துவக் கலையையும் அறிந்தவர்கள். இவர்கள் பாடல்களில் தத்துவம் ஆத்மஞானம் விஞ்ஞானம் ஆகிய யாவும் அடங்கும்.

"காதற்ற ஊசியும் வாராது காண் கடைவழிக்கே" என்ற வாசகமே அறிவு நிலையை உணர்த்தி தாரவுள்ளம் பேணப்பெற்ற பட்டினத்தாரை ஞானமார்க்கத்தில் ஏெல்ல வைத்தது.

*நந்த வனத்தில் ஓர் ஆண்டி அவன்*
*நாலாறு மாதமாய்க்குயவனை வேண்டி*
*கொண்டு வந்தான் ஒரு தோண்டி மெத்தக்*
*கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி*

குயவன் என்பது பிரம்மாவைக் குறிக்கும்

ஜீவன் என்ற ஆண்டி பத்து மாதமாக வேண்டிக் கருப்பையிலிருந்து ஒரு மட்பாண்டத்தை (தோண்டியை) கொண்டு வந்து உலகத்தில் பல கூத்துக்களாடி இறுதியில் அதைப் போட்டுடைக்கிறான் என்றும் பொருள் . இதில் ஒரு பெரும் தத்துவம் அடங்கியுள்ளது. முற்காலத்து சித்தர் ஒருவர் - சிவவாக்கியர் என்று பெயர் - அவர் பாடிய பாடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“நட்ட கல்லைத் தெய்வம் என்று
நாலு புஸ்பம் சாத்தியே
சுற்றி வந்து முணு முணு
என்று சொல்லும் மந்திரம் ஏதடா
நட்ட கல்லும்பேசுமோ நாதன் உள்ளிருக்கையில்
சுட்ட சட்டி சட்டுவம் கறிச்சுவை அறியுமோ.

பழும்பெரும் சித்தர்களில் குதம்பைச் சித்தர் ஒருவர் - குதம்பை ஒரு காதணி அதை அணியும் பெண்களை குதம்பாய் என்பர்.

குதம்பைச் சித்தர் தம் பாடல் ஒன்றில்

“மாங்காய்ப் பாலுண்டு மலைபோல் இருப்போர்க்கு
தேங்காய்ப்பால் ஏதுக்கடி குதம்பாய்
தேங்காய்ப்பால் எதுக்கடி”

என்று விளம்பினார். மனித மூளையின் அடிப்பாகத்தில் மாங்காய் உருவில் ஒரு சிறிய கானில் சுரப்பி உண்டு. மெய் ஞானிகள் ஐம்புலங்களையும் அடங்கி நிஷ்டையிலிருக்கும்போது இந்தச் சுரப்பிலிருந்து சுரக்கும் ஓமோன் எல்லா இந்திரியங்களையும் கட்டுப்படுத்தி வைத்திருக்கும். ஆனால் போலிச் சாமிகளோ கள்ளையுண்டு மோனநிலையிலிருப்பார்களாம். அதையே உயிரியல் பற்றி அறிந்த இச் சித்தர் இவ்வாறு பாடியுள்ளார்.

இந்த கானில் சுரப்பிகளை ஆராய்ந்த விஞ்ஞானிகள் இவற்றை 20ம் நூற்றாண்டில்தான் கண்டுபிடித்தார்கள்.ஆனால் எம் மாபெரும் சித்தர்களோ நூறு நூற்றாண்டுகளுக்கு முன்பே இவற்றைப் பற்றிப் பாடி உள்ளனர். அச் சித்தர் தம்பெருமை கூறவும் வேண்டுமோ.

சிவவாக்கியர் உருவ வழிபாடு, வேதசாத்திரங்கள், சாதிபேதங்களையும் ஏளனம் செய்துள்ளார்.

“ஊரிலுள்ள மனிதர்கள் ஒரு மனதாய்க் கூடியே
தேரிலே வடத்தையிட்டு செம்பைவைத்து இழுக்கிறீர்
ஆரினாலும் அறியொணாத ஆதி சித்த நாதரை
பேதையான மனிதர் பண்ணும் பிரளி பாரும் பாருமே”

என்றும்

சாத்திரங்கள் ஓதுகின்ற சட்டநாதம் பட்டரே
வேர்த்து இளைப்பு வந்தபோது வேதம் வந்து உதவுமோ
என்றுவேத சாத்திரங்களை ஓதுவதையும்
“பறைச்சியாவது ஏதடா பணத்தியாவது ஏதடா?
இறைச்சி தோல் எலும்பிலும் இலக்கமிட்டு இருக்குதோ
பறைச்சிபோகம் வேறெதோ பணத்தியோகம் வேறெதோ?
என்று புரட்சிகரமான விடயங்களைப் பாடியுள்ளார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடுவெளிச்சித்தரும் அறநெறிப்பாடல்கள் பாடியுள்ளார்
"பாபம் செய்யாதிரு மனமே நாளைக்
கோபம்செய்தே யமன் கொண்டோடிப்போவான்.

சிவவாக்கியரின் அர்த்தமுள்ள பாட்டிலொன்று

மீன் இறைச்சி தின்றதில்லை அன்றும் இன்றும் வேதியர்
மீனிருக்கும் நீரிலோ மூழ்வதும் குடிப்பதும்
மான் இறைச்சி தின்ற தில்லை அன்றும் இன்றும் வேதியர்
மான் உரித்த தோலிலோ மார்பில் நூல் அணிவதும்

கொங்கண நாயனார் பாடல்

மண்ணுமில்லாமலே விண்ணுமில்லை கொஞ்சம்
வாசமில்லாமலே பூவுமில்லை
பெண்ணுமில்லாமலே யானுமில்லையிது
பேணிப்பாராடி வாலைப் பெண்ணே."

என்று பாடிய பாடலில் பொதிந்துள்ள அர்த்தத்தைப் பாருங்கள்.

அட்டமாசித்தி பெற்ற பதினெண் சித்தரில் ஒருவரான அகஸ்தியர்

"மனமதுசெம்மையானால் மந்திரஞ் செபிக்க வேண்டாம்
மனமதுசெம்மையானால் வாயுவையுயர்த்த வேண்டாம்
மனமதுசெம்மையானால் வாசியை நிறுத்த வேண்டாம்
மனமதுசெம்மையானால் மந்திரம் செம்மையாமே"

என்ற பாடல் இவரது ஞானப்பாடல்களிலொன்றாகும்.

மூவாயிரம் பாடல்கள் உள்ள திருமந்திரம் என்பவற்றை எழுதியவர் திருமூலநாயனார். இவர் கூடுவிட்டுக் கூடுபாய்ந்து பின் தன் சொந்த உடலைத் தேடியபோது அது அகப்படவில்லை. நான் சிலகாலம் பொருளைத் தமிழில் பாட வேண்டும் என்பதற்காகத்தான் இறைவன் என் உடம்பை மறைத்து விட்டான் என்று உணர்ந்தார். அதனால் யோகத்திலமர்ந்து மூவாயிரம் பாடல்களைக் கொண்ட திருமந்திரத்தை இயற்றினார். அவை அணுதத்துவம் வரை அகண்டதத்துவம் வரை கண்டது.

பாம்பாட்டிச் சித்தர் பாடுகிறார்

"நாடு நகர் வீடு மாடு நற்பொருள் எல்லாம்
நடுவன்வரும் பொழுதுநாடி வருமோ?
கூடுபோனபின்பு அவற்றால் கொள் பயன் என்று
கூத்தன் பதம் குறித்து நின்று ஆடுபாம்பே."

இப்பாடல் 'காதற்ற ஊசியும் வாராது காண்கடைவழிக்கே' என்ற தத்துவத்தைக் கொண்டுள்ளது என்பது தெளிவாகத் தெரிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரீரத்தின் குணம் பற்றிப் பாடுமவர்

“ஊத்தைக் குழிதனிலே மண்ணை எடுத்தே

உதிரப்புனலினிலே உண்டைசேர்த்தே

வாய்த்த குயவனார் அவர் பண்ணும்பாண்டம்

வறையோட்டுக்கும்ஆகாதென்று ஆடுபாம்பே என்கிறார்.

பேயாக அலையும்தன்மையுள்ள மனத்தை அகப்பேய் என்று பெண்ணாக உருவகப்படுத்தி பாடினாராதலால் அவரை அகப்பேய்ச் சித்தர் என்பர்


*தத்துவத் தெய்வமடி அகப்பேய்*
*சதாசிவமானதடி*
*மற்றுள்ள தெய்வமெல்லாம் அகப்பேய்*
*மாயை வடிவாமே*

ஒரு வாலைப்பெண்ணை முன்னிறுத்திப் பாடினார் கொங்கணநாயனார். அவர் பாடல்கள் தத்துவத்தை உள்ளடக்கி உள்ளன.

இவ்வாறு ஆத்மஞானத்தைப் பல வகைகளில் பல பாடல்களால் பாமரருக்குப் புகட்டி பல தத்துவங்களையும் மனிதர்க்குத் தம்பாடல்களால் எடுத்துக் கூறிய சித்தர்களின் பாடல்கள் சிந்தையைக் கிளறும் தன்மையுடையன என்பதில் ஐயமில்லை.

# ‘நான்மணிமாலை’ என்ற பிரபந்தம் ஒன்றை யாத்துள்ளார் பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம் அவர்கள்



பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம் அவர்கள் அருள்பாலிக்கும் நயினை நாகபூசணி அம்மன் மீது ‘நான்மணிமாலை’ என்ற பிரபந்தம் ஒன்றை யாத்துள்ளார்.

பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம் அவர்கள் ஓர் அருட்கவி ஆவார். அவர் ஈழம், தமிழகம், இங்கிலாந்து, சுவிற்சர்லாந்து, கனடா ஆகிய நாடுகளிலுள்ள பல்வேறு ஆலயங்களின்மீது நூற்றுக்கும் மேற்பட்ட திருப்பாமாலைகள் பாடியுள்ளார். புராணம், திருப்பள்ளி எழுச்சி, பிள்ளைத்தமிழ், தூது, துதி, அந்தாதி, பதிகம், சிந்து, வெண்பா, இரட்டை மணிமாலை, மும்மணிக்கோவை, நான்மணிமாலை என ஐம்பதுக்கும் மேற்பட் பல்வேறு இக்கிய வடிவங்களைக் கையாண்டு பாடிய சமய இலக்கியங்கள் சைவத்தமிழ் இலக்கியத்திற்கு வளம் சேர்ப்பனவாகும். ஈழத்துச் சைவப் பழம்பதிகளில் இணுவில் பதியும் ஒன்றாகும். இளமைக்காலம் முதலாக இணுவில் முருகன் பதியில் ஈடுபாடு கொண்டு பாவியற்றும் ஆளுமையை வளர்த்துக்கொண்ட புலவர் பஞ்சாட்சரம் அவர்களின் பழுத்த பக்தி அனுபவம் இந்நூலிலும் வெளிப்படுவதை அவதானிக்கலாம். இவற்றுடன் தமிழ் இலக்கியத்திற்குக் கவிதை, குறும்பாக்கள், காவியம், சிறுகதை, சமூக நாவல்கள், குட்டிக்கதைகள், சிறுவர் பாடல்கள், சிறுவர் நாடகங்கள், பாநாடகங்கள், உருவக்கதைகள் என நூற்றுக்கும் மேற்பட்ட நூல்கள் வெளியிட்டுள்ளார். இவரது இலக்கிய ஆளுமையின் பயனாகச் சாகித்திய மண்டலப்பரிசு, இலக்கிய கலை, இலக்கியப் பேரவையின் பரிசு என இவருக்குக் கிடைத்துள்ளமையும் ஈண்டு நினைவு கொள்ளத்தக்கதாகும்.

**- பேராசிரியர் இ.பாலசுந்தரம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறகடிக்கும் சிட்டுக்கள்




எமது மண்ணின் கடந்த கால போர்க்காலத்தின் கசப்பான அனுபவங்கள் மக்களின் மனங்களிலே, குறிப்பாக இளையோர், சிறுவர்களின் மனங்களிலே ஒருவித வக்கிர உணர்வை ஏற்படுத்தி, அவர்களிடையே மென்போக்கை வேரறுத்து, வன்முறைப் போக்கிலான உணர்வுகளோடு அவர்களை நகர்த்துவதை இன்று நாம் காண்கின்றோம்.

அதையும் மீறி, சமகாலத்தில் பூதாகரமாக உருவெடுத்துள்ள அந்நிய கலாசார மோகம் மற்றும் நவீன விஞ்ஞான தொலைத்தொடர்புச் சாதனங்களின் ஊடுருவல் போன்றவற்றால் பெரியோர் முதல் சிறியோர் வரை திசைமாறிப் போவதையும் நமது உயர் விழுமியங்கள் சிதைக்கப்படுவதையும் அறிந்தும் அறியாதவர்களாக - தெரிந்தும் தெரியாதவர்களாக நாம் வாழ்கின்றோம்.

இந்த மனோநிலை மாற்றியமைக்கப்பட்ட மக்கள் மத்தியில் மனித விழுமியங்கள் - பண்பாடுகள் புத்துயிர் பெற, நல்லவை பற்றிய சிந்தனைகளும் - மென்போக்கிலான வழிமுறைகளும் உளவியல் நீதியாக படிப்படியாக ஊட்டப்பட வேண்டும்.

இதனாலேயே இன்று ஒவ்வொரு வீட்டிலும் ஒவ்வொரு பிள்ளைக்கும் ஒரு கலைவடிவம் பயிற்றப்பட வேண்டும் என்று உளவியலாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

இதற்கான ஓர் ஆரம்ப ஆயுதமாகவே நம் முன்னோர்கள் மழலைப் பருவத்திலிருந்தே மனித விழுமியங்களை ஊட்டி வளர்க்கும் வகையில் மழலைப் பாடல்களையும், சிறுவர் இலக்கியங்களையும் மற்றும் சிறுவர் நீதிக்கதைகள் சார் நூல்களையும் அதிகளவில் ஆக்கிப் பயன்படுத்தினர்.

70களுக்குப் பின்னர் காலத்தில் மாற்றமும் நவீன விஞ்ஞான தொழில்நுட்ப தொடர்பு வாதங்களின் வருகையால் ஏற்பட்ட நுகர்வுக் கலாசாரமும் எமது மக்களின் மனங்களிலே மனிதம், மனித விழுமியங்கள் தொடர்பான சிந்தனைகள் படிப்படியாக சிதறடித்து பெற்றோர், பெரியோர், அறிஞர் மத்தியில் எதிர்கால சந்ததியை ஆரோக்கியமாக வளர்த்தெடுக்கும் சிந்தனையும் சிதைத்துக் கொண்டிருப்பதை நாம் அனுபவிக்கின்றோம்.

இந்த நிலைமை மாறி, நமது மழலைகள், சிறுவர்கள் மனங்களில் தூய சிந்தனைகளையும் - தூய வழிமுறைகளையும் ஊட்டி நெறிப்படுத்தி, மனிதனின் புனிதத்தை உணர்த்தப்படவும் வேண்டும் என்ற உயரிய நோக்கோடு அருட்பணி செ.அன்பராசா அடிகளார் தொடங்கியுள்ள இந்த சிறுவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியப்பணி மனிதத்தையும், மனித விழுமியங்களையும், நமது மண்ணின் பக்தி, கலை, பண்பாடுகளையும் நேசிக்கும் அனைவராலும் வரவேற்று, வளர்க்கப்படும் என்பது எனது நம்பிக்கை.

தனது பேனா முனையால் அநீதிகளைச் சுட்டிக்காட்டி, சுட்டெரிந்து, நீதிக்குப் புத்துயிரூட்டும் பணியில் தன்னை அர்ப்பணித்துப் பணியாற்றும் அடிகளாரின் இப்புதிய சிறுவர் இலக்கியப்பணி, பல்வேறு வடிவங்களிலே நம் சிறுவர்களின் பிஞ்சு மனங்களிலே விதைக்கப்படும் நச்சு விதைகளை சுட்டெரிந்து, சுடரேற்றும் சூரியனாக ஒளிரும் என்ற நம்பிக்கையோடு அவர் பணி தொடர ஆசிக்கிறேன்.

**- கவித்தென்றல் செ.அ.அழகராசா**

## அகர முதல

அ என்று சொல்லிடுவோம்
அறத்தை நிலை நாட்டிடுவோம்
ஆ என்று சொல்லிடுவோம்
ஆணவத்தை அகற்றிடுவோம்
இ என்று சொல்லிடுவோம்
இன்சொல்லே பேசிடுவோம்
ஈ என்று சொல்லிடுவோம்
ஈசன் பதம்தொழுதிடுவோம்
உ என்று சொல்லிடுவோம்
உண்மையே உரைத்திடுவோம்
ஊ என்று சொல்லிடுவோம்
ஊக்க முடன் முயன்றிடுவோம்
எ என்று சொல்லிடுவோம்
எழுச்சி பெற முயன்றிடுவோம்
ஏ என்று சொல்லிடுவோம்
ஏற்றமதே பெற்றிடுவோம்
ஐ என்று சொல்லிடுவோம்
ஐயம்தனை அகற்றிடுவோம்
ஒ என்று சொல்லிடுவோம்
ஒரு குலமாய் வாழ்ந்திடுவோம்
ஓ என்று சொல்லிடுவோம்
ஓம் என்றே ஓதிடுவோம்
ஔ என்று சொல்லிடுவோம்
ஔவியம் விலக்கிடுவோம்
ஃ என்று சொல்லிடுவோம்
அஃது நான்றே கண்டிடுவோம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையர்கோன்



ஈழத்துத்தமிழ் இலக்கிய வரலாற்றில், தமிழச்சிறுகதை முன்னோடிகளாக இலங்கையர்கோன்(சிவஞானசுந்தரம்) சி.வைத்தியலிங்கம், சம்பந்தன் ஆகியோர் இருந்துள்ளனர். ஏழாலையைச் சேர்ந்த முருகேசு நடராசா தம்பதியினரின் மகனாக 06.09.1915 இல் சிவஞானசுந்தரம் பிறந்தார். தமிழ்ச்சிறுகதையின் இன்னுமொரு மூலவராகத் திகழும் சி.வைத்தியலிங்கமும் ஏழாலை மண்ணின் மைந்தனாவார்.

உருவப்பிரக்ஞையுடனான தமிழ்ச் சிறுகதைகளை உள்ளடக்கச் சிறப்புகளுடன் ஆக்கித் தந்த முதல்வர் என்று போற்றுதலுக்குரிய இலங்கையர்கோனுக்கு பெற்றோரிட்ட பெயர் சிவஞானசுந்தரம் என்பது. அந்த இயற்பெயரே மறந்து போகும் அளவுக்கு பிரபல்யம் மிக்கதாகவும் பலராலும் பேசப்படுவதாகவும் மாறிவிட்ட பெயர்தான் எழுத்துக்காக இவர் சூடிக்கொண்ட 'இலங்கையர்கோன்' என்னும் புனைப்பெயர்.

புதுமைப்பித்தன் அடிக்கடி கூறுவாராம் "என்னுடைய புனைப்பெயரின் புதுமையும் கூட எனது ஆரம்பகால பரபரப்பான பிரபல்யத்துக்கான காரணமாக அமைந்து விட்டது." என்று இலங்கையர்கோன் என்னும் பெயருக்கும் அது பொருத்தமுடையதே.

ஆங்கிலக்கல்வி, ஆங்கில இலக்கியங்களிலான அலாதியான ஈடுபாடு D.R.O என்னும் அரச உயர் பதவி போன்ற முப்பதுகளின் உயர் மத்தியதர வகுப்பின் உடையார் மிடுக்குகளின் ஒரு அங்கமாக இருந்து இலக்கிய ஈடுபாட்டின் அர்ப்பணிப்பால் அவைகளை உடைத்துக்கொண்டு வெளியே வந்தவர் இவர்.

இவருடைய முதல் சிறுகதை 'மரியமதலேனா' கலைமகள் இதழில் வெளிவந்திருக்கிறது. Teen age என்னும் 18ஆவது வயதில் இவருடைய கன்னிப்படைப்பான 'மரிய மதலேனா' கலைமகளில் வெளி வந்தது என்று செம்பியன்செல்வன் குறிக்கின்றார். 18 வயது என்றால் 1933 என்றாகிறது.

"ஈழத்துச் சிறுகதை வரலாறு" என்னும் தனது நூலில் இலங்கையர்போன் 1930 இல் தனது முதல் கதையுடன் எழுத்துப்பிரவேசம் செய்ததாக ஓரிடத்திலும் தனது 18-19 வயதில் சிறுகதைகள் படைக்க அவர் துணிந்து விட்டதாக பிறிதோர் இடத்திலும் குறிக்கின்றார். நமது முற்போக்கு விமசகர்கள் இந்த முன்னோடிகள் பற்றிய அக்கறைகளை பெரிதாகக் கொண்டிருக்கவில்லை, இது போன்ற சூழலில் நமது முன்னோடிகள் பற்றிய மீள் ஆய்வுகள் முக்கியமாகின்றன.

இலங்கையர்கோனில் சிறுகதைகள், புராண, இதிகாச வரலாற்று சம்பவங்களையும் மையமாகக் கொண்டவைகளாக அமைந்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரியமதலேனா, கடற்கோட்டை, அனுலா, யாழ்பாடி, மேனகை, சிகிரியா போன்ற ஒன்பது புராண இதிகாசக் கதைகளையும் வெள்ளிப்பாதசரம், துறவியின் துறவு, என் தமக்கை, கடற்கரைக் கிழிஞ்சல், வாழைமர நிழலில், வஞ்சம், அநாதை போன்ற இருபது கதைகளை சமூக வாழ்வுக் கதைகளாகவும் படைத்துள்ளார்.

"வெள்ளிப்பாதசரம்" என்னும் சிறுகதைத் தொகுதி 1962இல் இவருடைய மரணம் நிகழ்ந்த ஓராண்டு முடிவில் இவருடைய மனைவி செல்லம்மா இலங்கையர்கோன் அவர்களால் வெளியிடப் பட்டுள்ளது. இலங்கையர்கோனின் 15 சிறுகதைகளைக் கொண்டிருக்கம் தொகுதி இது.

ஆங்கிலப்புலமை மிக்கவரான இலங்கையர்கோன் பிறமொழிப்படைப்புக்களைத் தமிழில் மொழி பெயர்த்துப்பணியாற்றியுள்ளார். இவருடைய மொழிபெயர்ப்பு நாவல்கள் ஈழுகேசரியில் தொடர் கதைகளாக வெளிவந்துள்ளன.

50களின் பின் நாடகத்துறையில் முழுமூச்சுடன் ஈடுபட்டவர் இவர். இவருடைய வானொலி நாடகங்கள் மிகப்பிரபல்யம் கொண்டவை. விதானையார் வீட்டில், லண்டன் கந்தையா போன்றவை மறக்க முடியாதவை. இவருடைய மேடை நாடகமான 'மாதவி மடந்தை' 1958 இல் நூலுரு பெற்றுள்ளது. இதுவே இவருடைய முதல் நூலாகவும் அமைகிறது.

'மரிய மதலேனா' என்னும் தன்னுடைய முதல் படைப்பை 'மத்தலத்து மரியாள்' என்று மேடைக்கேற்ற நாடகத்தை எழுதிக்கொண்டிருந்த 1960நவம்பரில் இவரது மரணம் நிகழ்ந்திருக்கிறது.

மரிய மதலேனாவில் ஆரம்பித்த இவருடைய இலக்கிய வாழ்வு மத்தலத்து மரியாள் என்னும் நாடகத்துடன் அகால முடிவுற்றது எத்தனை சோகமானது.

சிறுகதை, மொழிபெயர்ப்பு, நாடகம் என்று தனது தடங்களை ஆழப்பதித்த இலங்கையர்கோன் காலத்தால் அழியாதவர். அவர் நாமம் என்றும் நிலைத்திருக்கும்.

**நன்றி : சங்கமம்**

***தாயகஒலி சந்தாதாரர்களுக்கு ஒரு தாழ்மையான வேண்டுகோள்.***


***அன்பானவர்களே! சந்தாப் பணத்தை வங்கியில் செலுத்துபவர்கள் தயவு செய்து வங்கியில் பணம்செலுத்திய பிரதியை எமக்கு அனுப்பிவைக்கும் வண்ணம் வேண்டுகின்றோம். பலர் வங்கியில் சந்தாப்பணத்தை வைப்பிலிட்டுள்ளார்கள். அத்தனை நல்லுள்ளங்களுக்கும் விளம்பரங்கள் தந்துதவிய பெருந்தகைகளுக்கும் எமது மேலான நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். உங்கள் ஆதரவு எம்மை உற்சாகத்துடன் செயற்பட வைத்துள்ளது. தொடர்ந்தும் உங்கள் மேலான ஆதரவை நல்குங்கள்.***

***- ஆசிரியர் குழு***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணுவில் - தமிழவேள் க.இ.க.கந்தசுவாமி



செந்தமிழும், சைவமும் தீந்தமிழ்க் கலைகளும் வளர்ந்த திருநெறிய மன்றங்களும், செந்நெறித் தமிழ்கவிப் பெருக்கை அலையலையாய் வழங்கிய அருந்தமிழ்ப் புலவர்களும், கலைமரபும், இசைமரபும் செறிந்து வளம் கொழிக்கச் செய்யும் கலைஞர்களும் அன்றுமுதல் இன்றுவரை வாழ்கின்ற இடம் இணுவில் திருவூர்.

வடஇலங்கையாம் யாழ் மண்ணின் மையப்புள்ளியாய் விளங்கும் இணுவிலின் கீழ்திசையில் அமைந்த சிவகாமியம்மன் கோயிலடியில் அம்மையின் அருட்கடாட்சத்தில் உதித்தவர்கள் தமிழவேள் அவர்கள். இவர் யாழ்ப்பாண மன்னன் கருணாகரத் தொண்டைமான் மரபுவழிவந்த கந்தப்பு எனும் குலதிலகர் பரம்பரையில் வந்த இலகுப்பிள்ளை கந்தையா அவர்களுக்கும் அவரின் வாழ்க்கைத் துணைவி சிவக்கொழுந்துக்கும் தவமைந்தனாய் வாய்க்கப் பெற்றார்.

1919 செப்ரெம்பர் 01 இல் பிறந்த இவர் தனது ஆரம்பக்கல்வியைக் கோண்டாவில் சைவத்தமிழ் மகாவித்தியாலயத்தில் பெற்றார். உயர்கல்வியை கொக்குவில் இந்துக்கல்லூரியில் பெற்றார். க.பொ.த. சாதரண தரப் பரீட்சையிற் சித்தி பெற்றதும் ஆசிரிய கலாசாலைப் புகுமுகத்தேர்விலும் சித்தியடைந்து கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் (1936-1937) பயிற்சி பெற்று பயிற்றப்பட்ட ஆசிரியரானார்.

1946இல் மதுரைப் பண்டிதர் தேர்வில் சித்தியடைந்து பண்டிதரானார். 1957இல் சென்னை சைவசிந்தாந்த மகாசமாசத்தின் சைவப் புலவர் தேர்விலும் சித்தி பெற்றுச் சைவத் தமிழ் அறிஞரானார். மிகுந்த தெய்வபக்தியும் கொண்ட இவர் பாடசாலைக் கற்பித்தலுடன் மட்டும் நில்லாமல் சமய, சமூகத் தொண்டுகளிலும் ஈடுபடலானார்.

தனது அறுபதாவது வயதில் ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வு பெற்றார். பாட நூலாக்குச் சபையிலிருந்து பாடநூல்களைத் தயாரித்தது மட்டுமன்றி மாணவர்களுக்குப் பயனளிக்கவல்ல பல பயிற்சி நூல்களையும் அவ்வப்போது எழுதி வெளியிட்டார்.

சிறுவர் இலக்கிய நூல்கள், சமய பாடப்பயிற்சி நூல்கள், தமிழ் மொழி இலக்கியப் பயிற்சி நூல்கள் என முப்பதுக்கும் மேற்பட் நூல்களை ஆக்கியுள்ளார். ஒரு நல்லாசிரியன் பிரதிபலன் கருதாமல் மாணவர்களுக்குச் செய்யக்கூடிய அத்தனை உதவிகளையும் தமிழ்த் தொண்டாகவே இவர் செய்தார் எனில் மிகையல்ல.

இவர் கொழும்பில் இருக்கும் காலத்தில் 1963இல் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் அப்போதைய செயலாளர் திரு.மு.வ.வயிரப்பிள்ளை அவர்கள் இவரது தமிழ்ப்பற்றைக் கண்டு இவரைத் தமிழ்ச் சங்க அங்கத்தவராக்கினார். 1964இல் இவரைச் சங்க நூலகச் செயலாளராக்கிச் சங்கத்தில் தங்கியிருந்து பணி செய்ய வைத்தார். அப்பொறுப்பை இவர் ஏற்றுப் புத்தாண்டுகாலம் நூலக வளர்ச்சிக்கு பெரும் பாடுபட்டுழைத்தார். புத்தகத்துடன் புத்தகமாகி இருந்து தனது உயிர் போலப் புத்தங்களை சேர்த்து பாதுகாத்து நூலகத்தை வளர்த்தார். இன்று இந்நாட்டில் முதல்தர நூலகமாக இது விளங்குவதற்கு இவரது உழைப்பு முக்கியமானது என்பது மிகையல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1974ஆம் ஆண்டு ஏப்ரல் தொடக்கம் கொழும்புத் தமிழ் சங்கத்தின் பொதுச் செயலாளராகப் பொறுப்பேற்று 1997ஆம் ஆண்டு வரை இருபது ஆண்டுகளுக்கு மேலாகச் செய்த சேவைகள் கணக்கிலடங்கா. கொழும்புத் தமிழ்ச் சங்கத்தை இந்த நாட்டில் மட்டுமன்றிக் கடல்கடந்த தமிழ்கூறும் நல்லுலகமெல்லாம் புகழ்பரவ வைத்த பெருமை இவருக்குரியது.

சிறுகுடிசை வீட்டில் இருந்த சங்கத்திற்குப் புதிய கட்டடம் தேவை என்பதை உணர்ந்தார். 1974 ஆனி மாதம் நூலகத்தின் முதற்கட்டடத் தொகுதி வேலைகள் ஆரம்பமாயின. ஆரம்பிக்கும் போது தலைவராக இருந்த திரு.மு.வயிரவப்பிள்ளை அவர்களும் நிதிச் செயலாளராகவிருந்த திரு.விக்னராசா, திரு.செல்லையா ஆகியோர் இவருடன் சேர்ந்து கொழும்பில் வாழும் தமிழ்க் கொடை வள்ளல்கள் தமிழ் நலன் விரும்பிகளின் வீடுதோறும் சென்று நிதி சேர்த்து மாடிக் கட்டட வேலையை நிறைவு செய்தனர். இவர் தனது சொந்த வேலைபோலவே இரவு பகல் பாராது பாடுபட்டார்.

மூன்றாம் மாடிக் கட்டட வேலையும் 1989இல் தொடங்கி 1992 நடுப்பகுதியில் நிறைவு பெற்றது. கட்டட வேலைகளுக்கு தனது சொந்தப் பணம் ஒரு இலட்சத்து முப்பத்தையாயிரம் வழங்கினார். 1979இல் மகாகவி பாரதியார் நூற்றாண்டு விழா சங்கத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பெற்றது. தமிழ் நாடு அமைச்சராக இருந்த இரா.நெடுஞ்செழியன் பிரதம விருந்தினராக வந்து சிறப்புரையாற்றினார். இவர் கந்தசுவாமி ஆசிரியரை சங்கத்தின் "தமிழ்க் காவலன்" என்று பாராட்டினார்.

அக்காலகட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சராயிருந்த எம்.ஜி.இராமச்சந்திரன் அவர்களைத் தமிழ்நாட்டுக்குச் சென்று நேரில் சந்தித்து சங்க நூலகத்திற்குப் பதினையாயிரம் புத்தகங்களை அன்பளிப்பாகப் பெற்றுவந்தார்.

தமிழ் மீதும் தமிழ்ப்புலவர் மீதும் அளப்பரிய பக்தி கொண்ட தமிழவேள் 2003 இல் ஈழத்துப் பூதந்தேவனார் தமிழ்ப் புலவர் கழகத்தை உருவாக்கினார். அதன் செயலாளராக இருந்து 2005இல் ஈழத்துத் தமிழ்ப் புலவர் மாநாட்டை நல்லை ஞானபம்பந்தர் ஆதீன மண்டபத்தில் நடத்தி மாநாட்டு மலரையும் ஈழத்துப் பூதந்தேவனாரின் வரலாறும் பாடல்களும் எனும் நூலையும் வெளியிட்டார்.

2004இல் இக்கழகத்தின் சார்பில் கொழும்புத் தமிழ்சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் தொல்காப்பியர் மாநாட்டை நடத்தியதுடன் "ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியக் கட்டுரைகள்" எனும் பெருநூலையும் வெளியிட்டார்.

2008இல் ஈழத்துப் பூதந்தேவனார் தமிழ்ப் புலவர் கழகத்தின் சிலப்பதிகார விழாவை அக்டோபர் 11,12,13ந் திகதிகளில் கொழும்புத் தமிழ் சங்கச் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் முத்தமிழ் விழாவாக நடத்தினார். பெரும் பேரறிஞர்களும் பேராசிரியர்களும் கலந்து சிறப்பித்தனர். 'சிலப்பதிகாரக் கட்டுரைகள்' எனும் பெருநூலும் வெளியிடப்பெற்றது. பெருவிழா நடத்திய பூரிப்புடன் இறையடி சேர்ந்தார்.


செயற்கரிய தமிழ்ப் பணி செய்த தமிழவேள் "நாற்பதுக்கு மேற்பட்ட நூல்களையும், ஐம்பதுக்கு மேற்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் எழுதிப் பதிப்பித்துத் தமிழ்த்தாய்க்கு அவற்றைக் காணிக்கையாக்கிச் சொல்லாலும் செயலாலும் தமிழ்த் தொண்டு செய்து இறவாப் புகழ்படைத்தார்.

**சைவப்புலவர் சு.செல்லத்துரை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்குனி – சித்திரை இதழ்




தாங்கள் அனுப்பி வைத்த தாயக ஒலி 28 கிடைக்கப் பெற்றேன். மிக்க மகிழ்ச்சி


இதழின் முன் அட்டையில் எம்மண்ணிற்கு பெருமை சேர்த்த எமது திருமலை மண்ணில் வாழ்ந்து மறைந்த பெரியார் காந்தி ஐயா மற்றும் சரஸ்வதி அம்மா, கலாநிதி முல்லைமணி ஆகியோரை தரிசிக்க வைத்த தங்களுக்கு நன்றிகள். மேலும் 'வீதி விபத்துக்களைத் தவிர்ப்போம். உயிர்களைப் பாதுகாப்போம்' என்னும் தங்களின் தலையங்கம் இன்றைய கால கட்டத்தில் பயனுள்ளதாக அமைந்துள்ளது. இதைக் கடைப்பிடிக்க இன்றைய சமுதாயம் முன்வரவேண்டும்.

நா.தியாகராசாவின் 'டெங்கு ஒழிப்போம்' கவிதை இப்போது எமது பகுதியல் நிலவும் டெங்குப் பிரச்சினைக்கு ஒரு வழிகாட்டியாக அமைகின்றது. இக் கவிதையை படித்து மக்கள் பயன்பெற வேண்டுமென வேண்டுகின்றேன்.

இதேபோல் இதழில் வெளியான சிறுகதைகள், கட்டுரைகள் யாவும் நன்றாகவே இருந்தன. இவ்வாறான ஆக்கங்களை வெளியிட்ட தங்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகள். தொடரட்டும் தங்கள் பணி.

**செ.கனகரெத்தினம்**
திருகோணமலை

# சிறந்த படையல்.... நிறைந்த கற்கைகள்....




தைப்பொங்கல் பண்டிகையைக் கோலமிடும் அழகிய அட்டைப்படத்தோடு, "தாயக ஒலி" இன்27ஆவது ஏடு சிறப்பிதழாக வெளிவந்துள்ளது. இதில் சுவைத்து வாசித்துப் பகிர்வதற்கான பல ஆக்கங்கள் பதிவாகி உள்ளன.

"1986 ஆம்ஆண்டுமுன் எழுதப்பட்ட "நமது காடுகள்", 1950 இல் பிரசுரமான " இலட்சிய வாழ்க்கை" என்பன காலத்தால் மூத்தவையாக இருந்தாலும் சமகால வாழ்க்கைக்குப் போஷாக்கை ஏற்படுத்துபவையாகப் பயனளிக்கின்றன.

98ஆவது அகவையில் வாழ்ந்த "காந்தி ஐயா" பொ.கந்தையா, இலட்சிய வாழ்வை நடத்துவோர்களே திருமனிதர்களாக இப்பூவுலகில் நிலைக்க முடியமென ஆதாரங்களோடு வலியுத்துகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எங்களால் அரிஜனங்கள் படும்இன்னல்களைக் கண்டு இரங்கினார்... பெரிய பதவிகள் அவர்களைச் சேர்க்கவில்லை" என்றெல்லாம் கருத்துரைக்கின்றார். சாதீயத்தைச் சாடியுள்ளார். அன்று காந்திய ஐயா கண்டு கசிந்துருகிய சாதிக் கொடுமை இன்றும் தமிழன்மனதில் செத்துவிடவில்லை யென்பதை இவ்விதழ் தரும் பிரபல சிறுகதை எழுத்தாளர் கே.ஆர்.டேவிட்டின் கதையும் செப்பமாக ஆதாரப்படுத்துகிறது.

இலங்கையின் கல்விப்புலத்தில் அரங்கேறிக் கொண்டிருக்கும் "சிலும்பல்களை" எடுத்துக் காட்டுகிறது இக்கதை. பிரித்தானிய ஏதிலிகளான பழைய மாணவரின் நிதிப் பங்களிப்பில் பாடசாலையில் பெயர் வளைவு கட்டப் பிள்ளையார் சுழி போடுவதிலிருந்து பெயர் வளைவுத் திறப்பு விழாவுக்கான கட்டப்பட்ட ஒலிபெருக்கி இறக்கும் கட்டத்துக்கும் கதை நகர்ந்து இரு இளைஞர்கள் சாதிப் பிரச்சினையைத் தொட்டு உரையாடுவதுடன் நிறைவு பெறுகின்றது.

தோழர் நா.சண்முகதாசன் புரட்சிகரச் சீன சார்பு கம்யூனிஸ்ட்வாதி என்பது உண்மை, ஆனால் இத் தோழரிடம் இன்னொரு பக்கமும் உண்டென்பதை இவ்விதழ் மூலம் அறியலாம். சூழலியல் சார்ந்த "நமது காடுகள்" என்ற கட்டுரை ஒன்றை 1986க்கு முன் வெளியிட்டுள்ளார். மூன்று தசாப்தங்களக்குப் பின் அவ்வெழுத்துரு இவ்விதழில் மறு பிரசுரமாகியிருக்கிறது. காடுகளின் பயனை மக்கள் நன்கறிய வேண்டுமென்பதற்காக இக்கட்டுரை வெளியிடப்பட்டிருப்பது சிறந்த மக்கள் பணியாகும்.

"ஆளுக்கொரு மரம் நடுவோம், நாளுக்கொருவரம் பெறுவோம்" என்று முன்னெடுப்போடு இலங்கை வடமாகாணசபை 2014 ஆம் ஆண்டு காத்திகை மாதம் மரம் நடுகை இயக்கத்தை ஆரம்பித்துள்ளது. ஆரம்ப வைபவத்தில் வட மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் ஆற்றிய உரையை இவ்விதழில் படிக்க முடிகின்றது. நா.சண்முகதாசன் கட்டுரை மலைநாட்டு நிலை பற்றிப் பேச, முதலமைச்சரின் உரை வடமாகாணத்தின் மரநடுகையைத் தூண்டுவதாக உள்ளது. தாவரவியல் புகட்டும் உண்மைகளை இரு கட்டுரைகளும் கொண்டுள்ளன.

"இந்தியாவின் அமர இலக்கியமான பஞ்சதந்திரக் கதைகளுக்கு இணையானது பாரதியாரின் நவதந்திரக் கதைகளாகும்" எனவும் பாரதியாரின் வேடிக்கைக் கதைகளும் சிறுவர் இலக்கியத்துக்கு அணிசேர்த்துள்ளன" எனவும் "சிறுவர் இலக்கியப் பரப்பில் பாரதியாரின் பங்களிப்பு" என்ற கட்டுரையில் கலாபூஷணம் தம்பு சிவசுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

பாரதியாரின் பாடல்கள் மக்கள் சமூகத்தில் வெள்ளம்போல் பிரவாகித்திருப்பது போல் மகாகவி பாரதியாரின் கதைகள் அனைத்துத்தர மக்களையும் சென்றடையவில்லையென்றே கூற வேண்டும். அவ்வகையில் ஓர் அன்பான வேண்டுகோள் "தாயக ஒலி" இல் குறுங்கதைகள் வெளியிடுவது போல் எதிர்காலத்தில் பாரதியாரின் கதைகளையும் வெளியிட்டால் அனைவரும் அவைகளையும் வாசிக்கும் வாய்ப்பைப் பெறுவர்.

அட்டைப்படக் கட்டுரைக்கு நிகரானதாக "கனடாவில் சோக்கலோ சண்முகம்" என்ற எழுத்துரு அறிக்கைகளைச் சுவைபடப் பகிர்கின்றது. ஏனைய ஆக்கங்களும் நன்று. ஈழத்துச் சிற்றிதழ் வளர்ச்சிக்கு எடுத்துக்காட்டாக இவ்விதழ் அமைக்கப்பட்டிருப்பது பாராட்டுக்குரியதாகும்.

**- செல்லக்கண்ணு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'தாயக ஒலி' பொங்கல் சிறப்பிதழ்




இரு திங்கள் ஏடான தாயக ஒலியின் தை - மாசிக்கான பொங்கல் சிறப்பிதழ் வெளிவந்துள்ளது. குற்றச் செயல்களைத் தடுப்பது தொடர்பான விடயங்களுடன் ஆசிரியர் தலையங்கமும் மரநடுகையின் முக்கியத்துவம் தொடர்பான வடமாகாண முதலமைச்சரின் உரையும் சமூகத்திற்குத் தேவையான நல்ல பல கருத்துக்களைத் தாங்கி பயணிக்கின்றன. 27வது வெளியீடாக வரும் தாயக ஒலியானது 56 பக்கங்களைக் கொண்டமைந்திருக்கின்றது. தைப்பொங்கலைச் சிறப்பிக்கும் முகமாக அட்டைப்படத்தையும், உள்ளே வர்ண விளம்பரங்களையும் கொண்டுள்ளது. கட்டுரை, சிறுகதை, கவிதை, நூல் விமர்சனம், கலைஞர்கள் கௌரவம், சிறுவர்கதை எனப் பல்வேறு விடயங்களைத் தாங்கிச் செல்கிறது. தமிழ் எழுத்தாளர்களினதும் படைப்பாளிகளினதும் பெருமையோடு உலகம் முழுவதும் தமிழ்மணம் பரப்பும் நற்காரியத்தை தாயக ஒலி செவ்வனே ஆற்றுகின்றது.

பாட்டாளி வர்க்கத்திற்காக உழைத்து மறைந்த முன்னாள் கியூப ஜனாதிபதி பிடல் காஸ்ரோவினை நினைவு கூர்ந்திருப்பது சிறப்பாகும். மொத்தத்தில் தித்திக்கும் பொங்கலைப்போல் உலகமெங்கும் தமிழ் பரப்ப வீறுகொண்டிருக்கிறது தாயக ஒலி.

**- பிரசன்னா**
**(தினக்குரல்)**

# 'தாயக ஒலிக்கு' ஒரு பாராட்டு

நிஜத்தில் நீ தாய் தான்,
உன் ஓசையும் தாய் ஒலிதான்
குடும்பத்தில் அனைத்தையும்
சுமக்கும் அன்னை போல்
நீ கை கொடுக்காத துறைகளே இல்லை

இதோ! இலக்கியமா!சமயமா!
திறனாய்வா! நூல் விமர்சனமா?
கவிதையா! கட்டுரையா!
சிறு கதையா! சிந்தைக்கோர் விருந்தா!
நகைச்சுவையா, நல்வைத்தியமா

என்ன இல்லை உன்னிடம்?
எதைத்தரவில்லை நீ எம்மிடம்!
அழகான தோற்றம் உன்னது
ஆழமான கருத்துக்கள் அதனுள்ளே!

எளிமையான வார்த்தைகள்
ஏற்றமான கருத்துக்கள்
சுவையான விடயங்கள்
சுடச்சுடத்தகவல்கள்!

கடுகு சிறிது காரம்பெரிது
அதே தான் உன் வடிவமும்!

உன் வளர்ச்சி ஓங்கட்டும்!
நிட்சயம் ஓங்கும்! வளரும்
காரணம் -
உன் பின்னணி சிவசம்பந்தமானது
புரிகிறதா?

**உன் ரசிகை**
**திருமதி.இ.ஜெகானந்தகுரு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Compliments From*

# N.Ranjithakumaran

MA (Human Rights)

*Solicitor*

180 Mitcham Road
Tooting
London SW17 9NJ
UNITED KINGDOM



Tel - 0208 767 9717
Mobile - 0795 688 6749
Fax - 0208 767 9684

email : ranjit@ranjitandco.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Kanaga Solicitors

KEY PERSONNEL


Name : Kanakavalli Nadarajanpillay
Kanaga Solicitors
108 High Street, Colliers Wood
London - SW 19  2 BT

Position in the firm : Principal Solicitor

**Academic/ professional Qualifications:**
L.L.B(Hons), Barrister of Lincoln's Inn, Masters at Law (L.L.M), Advocate & Solicitor of High Court of Malaya, Solicitor of the Supreme Court of England and Wales.

**Relevant and present Experience:**
Immigration asylum, Residental conveyancing, Commercial conveyancing, Civil litigation, Criminal litigation, Family & divorce cases, Land loard & tenant, wills and probate.

Successful practitioner of 16 years.




**Tel: 07878278131**
**020 8544 1100**
**108 High Street, Colliers Wood**
**London - SW 19 2 BT**
**email : kanakavalli_ek@yahoo.com**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Luckyland

**BISCUIT MANUFACTURERS**




NATTARANPOTHA, KUNDASALE, SRILANKA.

T: +94 081 2420574, 2420217, Fax : + 94 081 2420740

E-mail : luckyland@sltnet.lk

சிவராம் பதிப்பகம், 20(32), கல்லூரி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 021 221 9440

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org